தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1991-92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழு

நான்காவது அறிக்கை

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் 7 APR [illegible])

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1991-92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழு



(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.

53-396—I

பொருள்டக்கம்

பக்கங்கள்.

குழுவின் அமைப்பு ... ... it

அறிக்கை.

(i) முகவுரை iii

(ii) குழுவின் கூட்டங்கள் iii

(iii) குழுவின் ஆய்வுப் பயணங்கள் ... ... iii—iv

(iv) குழுவின் குறிப்புரைகள் ... ... iv—v

(v) உறுதிமொழிகள் பற்றிய விவரம் v

(vi) பொதுக் குறிப்புரைகள் v

இணைப்புகள்.

(1) நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெற்றதும் மற்றும் துறையின் பதில்களை படித்துப் பதிவு செய்யப்பெற்றதாகக் குழுவால் முடிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகளின் துறைவாரியான பட்டியல் ... ... 1—97

(2) அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டுவாரியான பட்டியல் 98

(3) நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்து துறைவாரியான மற்றும் ஆண்டுவாரியான பட்டியல் ... ... 99—100

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1991—92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு (4-10-1991ஆம் நாளன்று அமைக்கப் பெற்றது.)

தலைவர்.

1. திரு. இரா. நடேசன்

உறுப்பினர்கள்

2. டாக்டர் பெ. வீரபாண்டியன்
3. திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்
4. திருமதி ப. சரஸ்வதி
5. திரு. கே. சின்னசாமி
6. திரு. வெ. தமிழரசு
7. திரு. வி. பி. ஆர். ரமேஷ்
8. திரு. என். ஜி. வேணுகோபால்
9. திரு. எம். பெரியவீரன்
10. திரு. எம். கே. சுந்தரம்
11. திரு. மெ. ஆண்டி அம்பலம்
12. திருமதி ரமணி நல்லதம்பி

செயலகம்.

திரு. செ. சு. ஜானகிராமன் .. செயலாளர்

திரு. ரெ. கு. இராமச்சந்திரன் .. இணைச் செயலாளர்

திரு. தா. ஜேக்கப் ஆர்த்தர் .. துணைச் செயலாளர்

திரு. வெ. இராசாராமன் .. சார்புச் செயலாளர்

அரசு உறுதிமொழிக் குழுவின்

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

நான்காவது அறிக்கை

பெறுநர் :

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, சென்னை.

முகவுரை

1. 1991—92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) நான்காவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

2. குழு 1991 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18, 19 மற்றும் டிசம்பர் திங்கள் 2, 3, 16, 17 ஆகிய தேதிகளில் சென்னையில் கூடியது.

3. மேற்படி கூட்டங்களில், 1979 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை நிலுவையில் உள்ள 236 உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை ஆராய்ந்து, அவற்றில் 173 உறுதிமொழிகள் நிறைவேற்றப் பெற்றன வாக அல்லது பதில்களை பரிசீலித்துப் பதிவு செய்யப் பெற்றனவாக்க் கருதலாம் என்றும், 63 உறுதிமொழிகள் மீது நடவடிக்கை தொடரலாம் என்றும் குழு முடிவு செய்தது. மேற்படி கூட்டங்களில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது பரிசீலித்துப் பதிவு செய்யப் பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் துறைவாரியான விவரம் இணைப்பு 1-இல் காணலாம்.

குழுவின் ஆய்வுப் பயணங்கள்

4. கீழ்க்கண்ட உறுதிமொழி தொடர்பாக குழு 1991 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் தேதியன்று வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் இராணிப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய இடங்களுக்கும், டிசம்பர் திங்கள் 17 ஆம் தேதியன்று செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பல்லாவரம், பம்மல் ஆகிய இடங்களுக்கும் சென்று உறுதிமொழி நிறைவேற்றப்பெற்றதா எனப் பார்வையிட்டதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியது :—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் வாணியம்பாடியிலிருந்து இராணிப்பேட்டை வரையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் பாலாற்றில் கலப்பதால் குடிநீருக்கு பாதிப்பு ஏற்பட்டு தோல் சம்பந்தமான வியாதிகள் வருவது குறித்து (உறுதிமொழி எண். 198/87) விவரம் புக்கங்கள் 32-33இல்

மேற்படி ஆய்வுப்பயணத்தின்போது நிலைமைகளை ஆய்வு செய்து குழு கீழ்க்கண்டவாறு பரிந்துரைகள் செய்கிறது :—

1. சோளூர் என்ற இடத்தில் உள்ள டி.ஏ. அப்துல் வாஹித் நிறுவனத்தில் சுத்திகரிப்பு பணி சரிவர செய்யப்படவில்லை. கழிவுநீர் பாலாற்றில் விடப்படுகிறது என குழு அறிகிறது. அதை உடன் நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் குழுவிற்கு அனுப்பப்படவேண்டும்.

2. இராணிப்பேட்டையில் தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகத்தால் அமைக்கப்படவிருக்கும் பொது சுத்திகரிப்பு நிலையம் குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது 1992-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் அமைக்கப்பட ஆவன மேல் நடவடிக்கைகள் உடன் எடுக்க வேண்டுமென குழு பரிந்துரைக்கிறது.

3. வாணியம்பாடியில் மூல அனுப்பு மெயினோடு (Main Conveying main) இணைக்கப்படவேண்டிய III மற்றும் IV பகுதிகளில் நடைபெறும் இணைப்புப் பணிகள் பொதுசுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவுக்கு (Capacity) ஏற்ப முடிக்கப்படவேண்டும்.

4. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இடைவிடாமல் தொடர்ச்சியாக மின்சாரம் அளிக்க உறுதி செய்யப்படல் வேண்டும்.

5. பம்மல் பேரூராட்சியிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பல உரிமம் இல்லாமல் இயங்குகின்றன என்று குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. உரிமங்கள் இருந்தும் பல நிறுவனங்கள் பொது மக்களுக்கு சுகாதாரக்கேடு விளைவிக்கின்ற கழிவு நீரை வெளியேற்றுகின்றன. இம் முறைகேடுகளை முறைப்படுத்த பேரூராட்சியின் அனுமதி பெற்ற பின்புதான் தமிழ்நாடு மின்வாரியம் மின் இணைப்பு வழங்க

வேண்டும். பேரூராட்சியின் உரிமம் இல்லாமல் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படவேண்டும். புதியதாக இத் தொழிற்சாலைகளுக்கு உரிமம் கொடுக்கும்போது மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மின்சார வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், சுகாதாரத்துறை ஆகியவை இணைந்து செயல்படவேண்டும்.

குழுவின் குறிப்புரைகள்.

5. (1) உறுதிமொழி எண். 144/90—பம்பாய் பால் பண்ணையைப் போல் முன் மாதிரியான பால் பண்ணையை அமைப்பது குறித்து :—24—3—1990-ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 2177-க்குப் பதில் அளிக்கும்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், '' மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் சோழிங்கநல்லூரில் பால்பண்ணை அமைய இருக்கிறது '' எனத் தெரிவித்தார்.

23—11—1990-ஆம் நாளிட்ட, கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத்துறையிட மிருந்து பெறப்பட்ட பதிலில், நிதி விரைவில் பெறப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பதிலை 18—11—1991 அன்று ஆய்வு செய்த குழு, சோழிங்க நல்லூரில் பால் பண்ணை உடன் அமைக்கப்பட அரசு நூரித நடவடிக்கை எடுக்க வேண்டு மென வலியுறுத்துகிறது.

(2) உறுதிமொழி எண். 186/89—தஞ்சாவூர் மாவட்டம் குடவாசல் மருத்துவ மனையில் பிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்துவது குறித்து : 27—4—1989-ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 554-க்குப் பதில் அளிக்கையில், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் '' அரசு பரிசீலிக்கும் '' எனத் தெரிவித்தார்.

25—2—1991-ஆம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையிட மிருந்து பெறப்பட்ட பதிலில், இனிவரும் ஆண்டுகளில், மக்கள் நல்வாழ்வுத் துறைக் கான இரண்டாம் பகுதி திட்டங்களை முடிவு செய்யும்பொழுது அரசு கருத்திற்கொள்ளும் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

மேற்படி பதிலை 18—11—1991 அன்று ஆய்வு செய்த குழு, அம்மருத்துவ மனையில் குழந்தைகள் நலப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு போன்ற பிறப்புப் பிரிவு களை வெகு விரைவில் அமைக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்கிறது.

(3) உறுதிமொழி எண். 209/84 :—கன்னியாகுமரி மாவட்டம் பல்லிக்கூட்டம் அணைக் கட்டுவது குறித்து :—25—4—1984-ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 2245-க்குப் பதில் அளிக்கையில், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், '' அரசின் முடிவிற்குப் பிறகு வேலை துவங்கப்படும் '' எனத் தெரிவித்தார்.

18—1—1991-ஆம் நாளிட்ட பொதுப் பணித்துறையிட மிருந்து பெறப்பட்ட பதிலில், மேற்கண்ட திட்டம் குறைந்த பயன் செலவு விகிதத்தில் இருப்பதால் கைவிடப் பட்டது என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

மேற்படி பதிலை 18—11—1991 அன்று ஆய்வு செய்த குழு, இத்திட்டம் குறைந்த செலவு விகிதத்தில் இருக்கும் என்பதைக் கணக்கில் கொள்ளாமல், இத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனப் பரிந்துரை செய்கிறது.

(4) உறுதிமொழி எண். 285/89 :—சென்னை—கன்னியாகுமரி கடற்கரை சாலை அமைப்பது குறித்து : 31—3—1989-ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண் 175க்குப் பதில் அளிக்கையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் '' விரைவில் நிறைவேற்றப்படும் '' எனத் தெரிவித்தார்.

26—8—1991-ஆம் நாளிட்ட, பொதுப் பணித்துறையிடமிருந்து பெறப்பட்ட பதிலில், மைய அரசின் அனுமதி கிடைத்தவுடன் கடலூரிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற குறிப்பிடப் பெற்றுள்ளது.

மேற்படி பதிலை 3—12—1991 அன்று ஆய்வு செய்த குழு, மைய அரசின் ஒப்புதலைப் பெற்று இந்தப் பணியைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டும் எனப் பரிந்துரை செய்கிறது.

(5) உறுதிமொழி எண். 604/87 :—திருத்தணி வட்டம் நல்லாறு கிராமத்திற்குச் செல்ல குசஸ்தலையாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டுவது குறித்து : 13—11—1987-ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 13214-க்குப் பதில் அளிக்கையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து இருகின்ற மற்ற வேலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

28-2-1991 ஆம் நாளிட்ட பொதுப் பணித்துறையிடமிருந்து வரப்பெற்ற பதிலில், 1991-92 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டப் பணிகளில் (நிதிப்பற்றாக்குறையின் காரணமாக) சேர்க்கப்படவில்லை என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

மேற்படி பதிலை 3-12-1991 அன்று ஆய்வு செய்த குழு, 1992-93 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டப் பணிகளில், இத்திட்டம் சேர்க்கப்படவேண்டுமென பரிந்துரை செய்கிறது.

உறுதிமொழிகள் பற்றிய விவரம்.

6. அளிக்கப்பெற்ற உறுதிமொழிகளுள் நிறைவேற்றப் பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டுவாரியான பட்டியல் இணைப்பு 2இல் காணலாம்.

7. 1979 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டுகளில் அளிக்கப்பெற்ற உறுதிமொழிகளுள் நிலுவையில் உள்ளவை குறித்த, துறைவாரியான எண்ணிக்கையைக்காட்டும் பட்டியல் இணைப்பு 3-ல் காணலாம்.

பொதுக் குறிப்புரைகள்.

8. பேரவையில் அளிக்கப்பெறும் உறுதிமொழிகளின்மீது குறிப்பிட்ட கால அளவிற்குள் நடவடிக்கைகள் முற்றுப்பெறுகின்றனவா என்பதை அரசுச் செயலாளர்கள் உன்னிப்பாக கவனித்து வருவதுடன் அவ்வாறு நடவடிக்கைகள் முற்றுப்பெறாத உறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதை குழு வலியுறுத்த விரும்புகிறது.

9. சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு குறித்த, குறிப்பாக தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அபாயம் குறித்த உறுதிமொழிகளின்மீது அரசு அதிக அக்கறை எடுத்து, லைசன்ஸ் (உரிமம்) பெறாமல் தொழிற்சாலைகள் நடத்துவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மின்சார வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், சுகாதாரத்துறை ஆகியவை இணைந்து செயலாற்றி அவ்வாறான கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்னுரிமை தரவேண்டும் எனவும் குழு வலியுறுத்தவிரும்புகிறது.

10. குழுவின் இந்த அறிக்கைக்கு 1992 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8 ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புளிப்பு வழங்கப்பெற்றது.

8-1-1992,
மார்கழி 24, பிரஜோற்பத்தி,
திருவள்ளுவர் ஆண்டு 2022.

இரா. நடேசன்,
தலைவர்.

நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப் பெற்றதும் மற்றும் துறையின் பதில்களைப் படித்துப் பதிவு செய்யப் பெற்றதாகக் குழுவால் முடிவு செய்யப் பெற்ற உறுதிமொழிகளின் துறைவாரியான பட்டியல் விவரம்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

வ.எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
1.	37/89	உடுக்குறியிட்ட வினா எண் 70 துணை வினா திரு. வி. தம்புசாமி, எம்.எல்.ஏ., 5—4—1989.	நகராட்சியில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கும் இந்த உதவித் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்கின்ற விவரம்.
		உறுதிமொழியின் விவரம்	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் : இதைப் பற்றியும் அரசு பரிசீலனை செய்யும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.	குழுவின் குறிப்புரை :—16—7—1990 (நகராட்சியில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கும் தாட்கோ மூலம் வீடு கட்டும் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்கின்ற விவரம்) இத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன? மேலும் அத்துறையிடமிருந்து வந்துள்ள பதில் : அரசு எடுத்த முடிவின்படி 1989—90 ஆம் ஆண்டைப் போன்று, 1990—91 ஆம் ஆண்டிற்கு அறிவிக்கப்பட்ட 47,000 கான்கிரீட் வீடுகள் ஊரக வளர்ச்சித் துறையால் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்துக்கள் மூலம் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது தாட்கோ மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதும் தனியே செயல்படுத்தப்படவில்லை. (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, அ.சா.கு. எண் 45264/ஆதிந. 5/90, நாள் 26—10—1990.)
(1)	(2)	(3)	(4)
2.	42/90	உடுக்குறியிட்ட வினா எண் 4297 திரு. ஆர். பச்சைமலையில் வண்ணாடு மூக்கன், எம்.எல்.ஏ., 22—1—1990.	கிராமத்திற்கு சாலை அமைக்கும் திட்டம் குறித்து.
		(5)	(6)
		மாண்புமிகு டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் : தோனூரிலிருந்து மணலோடை வரை 2.5 கி.மீ. தூரத்திற்கு சுமார் ரூ. 30 லட்சம் செலவில் மற்றொரு சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், பச்சை மலையில் உள்ள தோனூர் மற்றும் சில ஊர்கள் வழியாக மணலோடை முதல் நாகூர் வரை ரூ. 125 இலட்சம் செலவில் 13 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைப்பதற்கு அரசாணை (நிலை) எண் 1400, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 22—8—1990-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. [ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (பமே) துறை, அ.சா.கு. எண். 10383/பமே/90-2, நாள் 26—9—1990.]

(1)	(2)	(3)	(4)
3.	247/90	உடுக்குறியிட்ட வினா எண். 3121 திரு. எஸ். குணசேகரன், எம்.எல்.ஏ., 5—4—1990.	ஆத்தூர் ஆதி திராவிட மாணவர், மாணவியர் விடுதிகளைவிரிவாக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதாஎன்பது குறித்து.

(5)	(6)
மாண்புமிகு டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் : மாணவர்களின் எண்ணிக்கையை 90-லிருந்து 105 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு மட்டும் அரசின் பரிசிலனையில் இருக்கிறது.	சேலம் மாவட்டம், ஆத்தூர் ஆதி திராவிடர் மாணவர் விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை 90 லிருந்து 95 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

(ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, அ.சா.கு. எண். 29533/ஆதி நல/90-2, நாள், 22—10—1990.)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (பமே) துறை.

(1)	(2)	(3)	(4)
4	252/89	உடுக்குறியிட்ட வினா எண். 454 திரு. எம். சீரங்கன், சட்டமன்ற உறுப்பினர், நாள் 4— 5— 1989.	மலைவாழ் மக்களுக்குள்ள சலுகைகள் மேட்டூர் வட்ட பால மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கும் நீட்டிக்கப்படுமா என்கின்ற விவரம்.

உறுதிமொழியின் விபரம்.	அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : இப்பொருள் அரசின் பரிசிலனையில் உள்ளது.	மலைவாழ் மக்களுக்குள்ள சலுகைகள் மேட்டூர் வட்ட பால மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கும் கிடைக்கும் பொருட்டு, பால மலையை ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் நலத்திட்டப் பகுதியின் கீழ் கொண்டு வர தருந்த கருத்துரு 1—12—1989 அன்று மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெறவில்லை. எனவே இப்பகுதியை ஒருங்கிணைந்த மலைவாழ் நலத் திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக கொண்டு வர இயலாது. இருந்தாலும், இப்பகுதியில் வாழும் பழங்குடியினருக்கு தெறிய பழங்குடியினர் நலத் திட்டத்தின் கீழ் (Dispersed Groups) நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும். மேலும், பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டு செலவிடப்படும் தொகையில் ஒரு சிறு பகுதியை ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் நலத்திட்டம் செயல்படுத்தப்படாத பகுதி குறிப்பாக சேலம் மாவட்டம் பாலமலை பகுதியில் பழங்குடியினரின் நலத்திற்காக ஒதுக்குமாறு சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அ.சா.கு. எண். 11961/பமே/91- நாள் 3—5—1991.)

வ.எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
5	43/90	உடுக்குறியிட்ட வினா எண். 5485 துணை வினா வே. பெரியசாமி, எம்.எல்.ஏ., 22—1—1990.	பெரியார் மாவட்டத்தில் பாரஸ்டு செட்டில்மெண்ட் பகுதியில் குடியிருக்கிற ஆதிவாசிகள் என்று சொல்லக்கூடிய சோழகர், இருளர் போன்றவர்களை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாகச் சேர்ப்பது குறித்து.

உறுதிமொழியின் விபரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

முன்னாள் ஆதி திராவிடர் நல அமைச்சர் மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : இது பற்றி அரசு பரிசிலனை செய்யும்.

(6)

பெரியார் மாவட்டத்தில் குடியிருக்கின்ற ஆதிவாசிகள் என்று சொல்லக்கூடிய சோழகர் போன்றவர்களுக்கு உதவும் பொருட்டு, பெரியார் மாவட்டத்தில் இயங்கி வரும் சத்தியமங்கலம் பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் துணை விதிகளுக்குத் தக்க விதித் திருத்தங்களை மேற்கொண்டு, அதன் செயல் எல்லையில், அந்தியூர் மற்றும் பர்கூர் பகுதிகளைச் சேர்த்து அம்மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியினரை உறுப்பினர்களாக சேர்த்து, செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, சத்திய மங்கலம் பெருபல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று அந்தியூரில் 16—5—1990 அன்று திறக்கப்பட்டுள்ளது.

(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அ.கா.கு. எண். 10385/பமே/90-5, நாள் 10—8—1990.)

(1)	(2)	(3)	(4)
	71/90	உடுக்குறியிட்ட வினா எண். 4256 திரு. எம். அண்ணாமலை, சட்ட மன்ற உறுப்பினர், நாள் 27—1—1990.	அரூர் வட்டம், மாம்பாடி ஆதி திராவிடர்கள் கடுகாடு கோரி வருவதை அரசு அறியுமா என்பது குறித்து.

(5)

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாம்பாடி கிராமத்திலிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு இடுகாடு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

(6)

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், மாம்பாடி கிராமத்திய ஆதி திராவிடர்களுக்கு மயான வசதி செய்து கொடுக்க மேற்படி கிராமத்திய புல எண். 38-1-ல் 0.07.0 எக்டேர் நிலம் கையகப் படுத்த நில எடுப்புச் சட்டம், பிரிவு 4(1)-ன் கீழான வரைவு அறிவிக்கைக்கு அரசு ஒப்புதல் அளித்து 18—7—1990 நாளிட்ட அரசு ஆணை எண். 1242-ல் உத்தரவு வெளியிடப்பட்டது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 10375/ஆதி.நி.6/90-4, நாள் : 29—11—1990.)

(1)	(2)	(3)	(4)
7	187/90	மானியக் கோரிக்கை எண். 31 பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன்மீது விவாதத்திற்கு அமைச்சர் பதிலுரை 29-3-1990.	ரூ. 96 இலட்சம் செலவில் 100 புதிய இடைநிலை ஆசிரியர்களைப் பணியமர்த்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

(5)

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்.

(6)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளிகளுக்கு 100 புதிய இடைநிலை ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்து அரசாணை நிலை எண். 1632, ஆதி திராவிடர் நலம் நாள் 1-10-1990 ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 1164/ஆதிந.7/91, நாள் : 10-1-1991.)

(1)	(2)	(3)	(4)
8	193/90	சட்டமன்றப் பேரவை செயலகம் அ.சா.கு. 12808/90-1, நாள் : 30-5-1990.	எண். மானியக் கோரிக்கை எண். 31 பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் மீது விவாதத்திற்கு அமைச்சர் பதிலுரை 29-3-1990.

(5)

மாண்புமிகு டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் : ''சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழாவையொட்டி சிதம்பரம் நந்தனார் பள்ளியில் ரூ. 10 இலட்சம் செலவில் சமூக கலையரங்கம் கட்ட அரசு திட்டமிட்டிருக்கிறது ''.

(6)

சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழாவையொட்டி, தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் நந்தனார் பள்ளியில் ரூ. 10 இலட்சம் செலவில் சமூக கலையரங்கம் கட்ட அரசு திட்டமிட்டு அரசு ஆணை நிலை எண். 116, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் : 25-1-1990-ல் ரூ. 10 இலட்சம் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டு நடப்பு ஆண்டில் (1990-91) ரூ. 5 இலட்சம் செலவு செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிக்கோள் நடுவிழா 9-8-1990 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

(அ.சா.கு. எண். 60314/குபாச/90-1, நாள் : 7-1-1991.)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

(1)	(2)	(3)	(4)
9	285/90	உடுக்குறியிட்ட வினா எண். 3431. துணை வினா திரு. கோ. விரையன், சட்ட மன்ற உறுப்பினர் 9-4-1990	தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்—சிராங்குடி புலியூர் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து.

(5)

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

(6)

தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், சிராங்குடி புலியூர் சிராம ஆதி திராவிடர்களுக்கு 26-9-1990-ம் நாளன்று வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(அ. சா. கு. எண். 30737?ஆதி. ந. 9?90-4, நாள் 24-1-1991)

53+89/—2

10 227/85 உடுக்குறியிட்ட வினா 632 துணை வினா திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், எம். எல். ஏ., 14—6—1985.

ஒவ்வொரு தாலுக்காவிற்கும் நீதிமன்றம் முன்சீப் கோர்ட் அமைப்பதாக சொன்னார்கள் ஆனால் ஏற்கெனவே நிலக்கோட்டை சேங்ஷன் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் அதற்கு இலவசமாக இடம் கொடுத்தும் இன்னும் அது அமைக்கப்பட வில்லை. அதற்கான காரணம் என்ன ?

உள்துறை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உயர் நீதி மன்றத்தோடு கலந்து அது குறித்து விரைந்து நடவடிக்கையை அரசு எடுக்கும்.

அரசாணை நிலை எண். 2647 உள்துறை நாள் 8—12—1990-இல் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் நிலக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(அ. சா. கு. எண். 138702 நீ. ம. சி.?90-1, நாள் 18—1—1991)

11 285/85 சிறைச்சாலைகள் குறித்தமானியக் கோரிக்கையின் மீதான பொது விவாதம் மாண்புமிகு சட்ட அமைச்சரின் பதிலுரை. 25—6—1985.

புதிய மாவட்டங்களுக்கு நீதிமன்றங்கள் அமைப்பது குறித்து

(5)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : புதிய மாவட்டங்களுக்கு நீதி மன்றங்கள் விரைவில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை விடுத்திருக்கிறார்கள். மிக விரைவில், அந்தப் பகுதிகளில் நீதிமன்றங்களை துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

(6)

மூன்றாகப் பிரிக்கப்பட்ட ராமநாதபுரம், காமராசர் மற்றும் பசும் பொன் தேவர் திருமகன் மாவட்டங்களுக்கு முறையே இராமநாத புரம், மதுரை மற்றும் சிவகெங்கையில் மாவட்ட நீதி மன்றங்கள் அமைக்க அரசு ஆணை நிலை எண். 1847 உள்துறை நாள் 10—8—1990-ல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

(அ. சா. கு. எண். 175158 நீ. ம். சி. 91-2, நாள் 15—3—1991)

12 4/86 உடுக்குறியிட்ட வினா 4140 துணை வினா திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், எம். எல். ஏ., 10—1—1986.

(3)

(4)

நிலக்கோட்டை தொகுதியில் நிலக்கோட்டை டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டை வத்தலகுண்டில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டு 1985-க்குள் அது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் பதில் அளித்திருந்தும் கூட இன்று வரையில் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு காரணம் என்ன ?

(5)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இதைப் பிரதியேகமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று நிதித் துறைக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கிறது.

(6)

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் நிலக்கோட்டை தாலுக்கா, நிலக்கோட்டை அல்லது வத்தலக்குண்டில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பது சம்பந்தமாக உயர் நீதி மன்றத்துடன் கலந்தாலோசித்து வத்தலக்குண்டுக்கு பதிலாக நிலக்கோட்டை யில் மாவட்ட முன்சீப் நீதி மன்றம் அமைக்க அரசு முடிவு எடுத்து அரசு ஆணை நிலை எண். 2647, உள் துறை நாள் 8—12—1990-ல் நிலக்கோட்டையில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டது.

(அ. சா. கு. எண். 142847/நீ. ம. சி/90-1, நாள்: 18—1—1991.)

(1)	(2)	(3)	(4)
7	187/90	மாவியக் கோரிக்கை எண். 31 பழங்குடியினர் மீது திராவிடர் முதலியோர் நலன் விவாதத்திற்கு	ரூ. 96 இலட்சம் செலவில் 100 புதிய இடைநிலை ஆசிரியர்களைப் பணியமர்த்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.	உறுதிமொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
13	27/87	உடுக்குறியிட்ட வினா எண். 11575 மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியன் பேரவைத் துணை தலைவர்.	சென்னையில் குடும்ப நீதி மன்றம் அமைக்கப்பட்டுவிட்டதா ? அப்படியென்றால் எல்லா மாவட்டங்களிலும் குடும்ப நீதி மன்றம் அமைக்கும் திட்டம் விரிவு படுத்தப்படுமா?	மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: ஒவ்வொரு மாவட்டத்திலும் துவங்கப்பட வேண்டுமென்பது அரசினுடைய நோக்கமாகும் அதற்காக அரசு நிதியை ஒதுக்க இருக்கிறது.
		உறுதி மொழிக் குழு அறிய விரும்பும் மேல் விவரங்கள் (6)	அரசு எடுத்த நடவடிக்கை (7)	
		சென்னை நகரில் இரண்டாவது குடும்ப நீதிமன்றம் ஏற்படுத்தும் செயற்குறிப்பின் தற்போதைய நிலை என்ன ?	சென்னை குடும்ப நீதிமன்றத்தில் தேங்கி கிடக்கும் வழக்குகளை விசாரிக்க முடிவெடுக்கும் வகையில் கூடுதல் நீதிபதி மற்றும் பணியாளர்கள் (Additional Judge with supporting staff) அரசு நிலை ஆணை எண். 769—உள் துறை, நாள்: 10—4—1990-படி நியமிக்கப்பட்டுள்ளனர். (அ. சா. கு. எண். 6869/நீதிமன்றங்கள்-B/91—1, நாள் : 25—1—1991)	

(1)	(2)	(3)	(4)	(5)
14	544/87	காவல் துறை மற்றும் நீயணைப்பு துறை மாவியக் கோரிக்கைகளின்போது அளிக்கப்பெற்ற பதிலுரை 5—5—1987	மாண்புமிகு டாக்டர் திரு. நெடுஞ்செழியன்: சென்னை மாநகரில் இருப்பதைப்போன்று மதுரை, கோவை மாநகரங்கட்கும் போலீஸ் கமிஷனர் பதவி கொண்டு தரப்படும்.	அரசாணை எண். 800, உள் துறை, நாள் 13—4—1990 மூலம் 1—4—1990 முதல் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரில் காவல் ஆணையர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (உள்துறை அ. சா. கு. எண். 118946/போலீஸ்/90-1, நாள் 23—8—1990).

(1)	(2)	(3)	(4)	(5)
15	190/89	காவல் துறை பற்றிய மாவியக் கோரிக்கை எண். 15 மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை 28—4—1989.	மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுவிலக்கு வழக்குகளை கவனிப்பதற்காக தனியாக ஒரு அமைப்பு இப்போது இயங்கி வருகிறது. இந்த அமைப்பு தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள். இது குறித்து நன்கு பரிசீலித்து விரைவிலே முடிவெடுக்கப்படும்..	தனியாக இயங்கிவந்த மதுவிலக்கு அமுல் பிரிவினை காவல் துறை சட்டம்—ஒழுங்கு பிரிவுடன் இணைப்பதற்கான ஆணை அரசு நிலை எண். 440, உள் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை,) நாள் 6—4—90 வெளியிடப்பட்டது. எனவே மதுவிலக்கு பிரிவு வழக்குகளை கவனிக்க தனியாக அமைப்பு இப்போது எதுவுமில்லை. மேற்கண்ட சூழ் நிலையில் உறுதிமொழி 190/89 நிறைவேற்றப்பட்டதாகக் கருதலாம் (உள் துறை அ. சா. கு. எண் 17330/89-2, நாள் 7—9—1990.)

(1) (2) (3) (4)

16 15/89 உடுக்குறியிட்ட வினா எண். 373, துணை வினா திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், எம்.எல்.ஏ. 20-7-1989

பல்லடத்தில் சிவில் நீதிமன்றம் ஏற்படுத்துவது குறித்து.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக்பாட்சா : உயர்நீதி மன்றத்தின் கருத்தைக் கேட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடத்தில் தனியாக ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (District Munsif Court) அமைப்பதற்கு போதுமான வழக்குகளின் எண்ணிக்கை இல்லையென உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது; ஆதலால் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பல்லடத்தில் தவிர வேறு ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க இயலாது.

(அ..சா.கு. எண். 20764/நீமசி/89-13, நாள்: 28-2-1991).

(1) (2) (3) (5)

17 199/89 காவல் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண். 15 மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் பதிலுரை 28-4-1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஹெட்கான்ஸ்டபிள், கான்ஸ்டபிள் போன்ற சான்வல் துறையினரின் 27,469 இல்லங்களுக்கு இந்த ஆண்டியிலே ஒரு பகுதியும் அடுத்த ஆண்டிலே ஒரு பகுதியுமாக எடுத்துக் கொண்டு மின் விசிறிகள் அமைத்து தரப்படும்.

இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், ஹெட்கான்ஸ்டபிள் போன்ற காவல் துறையினரின் இல்லங்களுக்கு மின்விசிறி அமைத்தல் குறித்து.

1988-89 ஆம் ஆண்டு காவல் துறை மாவியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், ஹெட்கான்ஸ்டபிள் கான்ஸ்டேபிள் போன்ற காவல் துறையினரின் இல்லங்களுக்கு மின்விசிறிகள் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்தார்கள். இச் செயற் குறிப்பை பரிசீலனை செய்த போது நிதித் துறை நடப்பு நிதியாண்டில் அதாவது 1989-90-ல் மாநிலத்தில் நிலவி வரும் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு இச் செயற் குறிப்பை மூன்று தனி கட்டமாக முறையே முதல் கட்டம் 1989-90 இரண்டாம் கட்டம் 1990-91 மற்றும் மூன்றாம் கட்டம் 1991-92-ல் செயல் படுத்துமாறு வலியுறுத்தியது.

குழுவின் குறிப்புரை.

(6)

முதலமைச்சர் 2 ஆண்டுகளில் அமைக்கப்படும் என்று உறுதிமொழி அளித்ததற்கு மாறாக துறையின் பதிலில் 3 ஆண்டுகளில் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உறுதிமொழியில் கூறியவாறு என் நடவடிக்கை எடுக்கவில்லை மேலும் 1989-90 இல் சுமார் 40 இலட்சம் செலவில் மின் விசிறிகள் அமைக்கப்பட்டன?

அரசு எடுத்த நடவடிக்கை.

(7)

முதல்வர் அவர்களின் ஒப்புதல் பெற்று மூன்று கட்டங்களாக செயல்படுத்த ஆணையிடப் பட்டுள்ளது. அதன்படி முதல் கட்டமாக 1989-90-ல் ரூ. 40 லட்சம் செலவில் 5,000 மின் விசிறிகள் அமைத்துத் தர அரசு ஆணையிட்டுள்ளது.

(அரசு ஆணை நகல்கள் ஐந்து இணைக்கப்பட்டுள்ளன).

3,432 மின் விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன. மிகுதியுள்ள 1,568 மின் விசிறிகள் விரைவில் பொருத்தப்படும்.

(அ.சா.கு. எண். 150145/காவல் ஜி./90-1, நாள்: 30-11-1990.

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	வார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
18	313/89	உடுக்குறியிட்ட வினா எண் 796, துணை வினா திரு. என். கணபதி, எம்.எல்.ஏ.	ஒவ்வொரு மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்கும் முன்சீப் மாஜிஸ்டிரேட் என்கிற அந்தஸ்து சட்ட நீதியாகக் கொடுக்கப்பட்ட பிறகு அவர்களே சிவில் வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்குவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

குழுவின் குறிப்புரைகள்.

(5)

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா :

தமிழ்நாடு முனசீப் கம் ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட் சர்வீஸ் ரூல்ஸ் 1988-ன்படி முனசீப் கம் ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட் என்ற நிறுவனத்தின் மூலமாக சிவில் நீதிமன்றங்களில் அவர்களுக்கு நிச்சயமாக அதிகாரங்கள் அளிப்பதற்கு நடவடிக்கை உயர்நீதி மன்றத்தின் மூலமாக எடுக்கப்படும்.

(6)

10-10-1990 நாளன்று நடைபெற்ற குழுவின் குறிப்புரை நீதிமன்றத்தின் பரிந்துரை கிடைக்கப்பட்டு வட்டதா

குறிப்புரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

குற்றவியல் நீதிபதி (Judicial Magistrates) களுக்கு மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் முதல் வகுப்பு நீதிபதி (District Munsif cum Judicial First Class Magistrates) என்ற பதவி மூலம் சிவில் நீதிமன்றங்களில் சிவில் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் வழங்குவதற்கு உயர்நீதிமன்றம் ஆதரவாக இல்லை உயர்நீதிமன்றத்தின் கருத்தை அரசு ஏற்றுள்ளது.

(அ.சா.கு. எண் 107319/நீமசி/89-13, நாள் 14-3-1991.)

உள்துறை.

(1)	(2)	(3)	(4)
19	255/90	உடுக்குறியிட்ட வினா எண் 5983, துணை வினா திரு. கே.ஏ. செங்கோட்டையன், எம்.எல்.ஏ. 6-4-1990.	கோவையிலும் பெரியார் மாவட்டத்திலும் திறந்த வெளிச் சிறை அமைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா :

கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்த மத்திய சிறைச்சாலையை மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

(6)

தற்போதுள்ள கோவை மத்திய சிறை நீண்ட காலத்திற்கு முன் நகரத்திற்கு வெளியே அமைக்கப்பட்டது. காலப் போக்கில் நகர வளர்ச்சி காரணமாக கோவை மத்திய சிறைக்கு அருகில் பல்வேறு நிறுவனங்கள் அமைந்துள்ளன. இதனால் கோவை மத்திய சிறை, கோவை நகரத்தின் மத்திய இடத்திற்கு உந்தப் பட்டுள்ளது. கோவை மத்திய சிறையை மாற்று இடத்திற்கு மாற்றிட செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(அ.சா.கு. எண் 91868/சிறை. சி/90-10, நாள் 30-1-1991.)

(1)	(2)	(3)	(4)
20	256/90	உருக்குநியிட்ட வீரா எண். 5117, துணை வீரா திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் (எம்.எல்.ஏ.) 6-4-1990.	நீதிமன்றங்களிலும் சில சமயங்களில் ஸ்டாம்ப் பேப்பர்கள் கிடைப்பதில்லை. ஆகவே அதற்கு என்று ஒரு இளைக்கை நியமித்து அவரிடம் பணம் கட்டி ரசீது வாங்கினால் அந்த முத்திரைத்தாளுக்கு உண்டான மாற்று ஏற்பாட்டை அரசு செய்ய இயலுமா என்பது குறித்து.

(5)

(6)

முன்னாள் அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன்) அருமையான யோசனை கவனிக்கப்படும்.

தற்போது நீதிமன்ற முத்திரைகள் பெறுவதில் எவ்விதத் தட்டுப் பாடும் இல்லை. தமிழகத்தின் எல்லா மாட்டக் கருவூலங் களிலும் வேண்டிய அளவு இருப்பு உள்ளதால் மாற்று ஏற்பாடு தேவையில்லையென்று கருதப்படுகிறது. மேலும் 1988 ஆம் ஆண்டு இது போல கருத்து பரிசீலனைக்கு வந்த போது, உயர் நீதிமன்றப் பதிவாளர், நீதிமன்ற முத்திரைகளுக்குப் பதி லாக அதற்குரிய பணத்தைச் செலுத்துவது, அதனால் ஏற் படக்கூடிய பல சிக்கல்களால் இயலக்கூடியதாக இல்லையென்று தெரிவித்ததால், முத்திரைகளுக்குப் பதிலாக ரொக்கப்பணம் பெறுவது என்ற கருத்து ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே இந்த யோசனை நீதிமன்ற முத்திரைகள் பெறுவதில் தட்டுப்பாடு ஏறபடும் நேரத்தில் பிறகு பரிசீலிக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 74-ன் படி, கட்டணங்கள் முத்திரைத்தாள் வாயிலாகத் தான் வருவிக்கப்படவேண்டும் என்றுள்ளது.

(அ.சா.கு. எண். 12665/நீ.ம.அ/90-3, நாள் 18-4-1991.)

(1)	(2)	(3)	(4)
21	289/90	மானியக் கோரிக்கை எண். 13, நீதி நிருவாகம் மாண்புமிகு சட்ட அமைச்சர் பதிலுரை 9-4-1990.	நீதிமன்றங்கள் தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றம் அமைப் பது குறித்து.

(5)

(6)

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : தூத்துக் குடியில் இந்த சம்மர் வெகேஷன் முடிந்தவுடன் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படும்.

திருநெல்வேலியுள்ள இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தை சிதம்பரனார் மாவட்டத் தலை நகரான தூத்துக்குடிக்கு மாற்றி சிதம்பரனார் மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றமாக அமைக்க அரசாணை நிலை எண் 113, உள்துறை, நாள் 18-1-1991 இல் ஆணை வெளியிடப் பட்டது.

(நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

(அ.சா.கு. எண். 92407நீ.ம.கி./90-2, நாள் 7-2-1991.)

(1)	(2)	(3)	(4)
22	291/90	மானியக் கோரிக்கை எண். 13, நீதி நிருவாகம் மாண்புமிகு சட்ட அமைச்சர் பதிலுரை. 9-4-1990.	நீதிமன்றங்கள் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் நிலக் கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதி மன்றம் அமைப்பது குறித்து.

		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : நிலக் கோட்டையில் ஒரு டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் நிச்சயமாக அமைக்கப்படும்.	திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் நிலக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்த அரசாணை நிலை எண். 2647, உள்துறை நாள், 8-12-1990-இல் ஆணை வெளியிடப்பட்டது (நகல் இணைக்கப்பட்டுள்ளது). நாள் (அ.சா.கு. எண். 92408?நீதிமன்றங்கள்-ii?90-2, 22-1-1991).
(1)	(2)	(3)	(4)
23	292 90	மாண்புமிகு சட்ட அமைச்சர் பதிலுரை 9-4-1990.	நீதிமன்றங்கள் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் இராணிப் பேட்டையில் ஒரு துணை நீதிமன்றம் (Sub–Court)
		(5)	(6)
		மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : இராணிப் பேட்டையில் ஒரு சப்கோர்ட் அமைக்கப்படும்.	வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூரிலுள்ள கூடுதல் சப்கோர்ட்டை சில கூடுதல் பணியாளர்களுடன் இராணிப் பேட்டைக்கு மாற்றி இராணிப்பேட்டையில் ஒரு சப்கோர்ட் அமைக்க அரசாணை நிலை எண். 2495, உள்துறை நாள் 15-11-1990 இல் ஆணை வெளியிடப்பட்டது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது). (அ.சா.கு. எண். 92410 நீமஇ?90-2, நாள் 22-1-1991)

10

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை	டொருள்.
(1)	(2)	(3)	(4)
24	356/90	உடுக்குறியிட்ட வினா எண். 6298, கனை வினா திரு. அ.எல். சுப்பிரமணியன், எம்.எல்.ஏ., 19-4-1990.	அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டை ஈரோட்டிலிருந்து பெருந்துறையில் நடைபெறுவதற்கு அரசு உத்தரவிடுமா என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் சொன்ன கருத்தை உயர்நீதிமன்றத்தோடு கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம்.	பெரியார் மாவட்டம் பெருந்துறையில் ஒரு உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது தொடர்பான கருத்துருவினை அரசு ஆய்வு செய்து அதனை 1992–93 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டமாக பரிசீலிக்க உத்தேசித்துள்ளது. (அ.சா.கு. எண். 113898/நீ.ம.சி./91-1, நாள் :30–10–1991).

(1)	(2)	(3)	(4)	(5)
				உறுதிமொழியின் விவரம்.
25	375/90	திரு. பி. எச். பாண்டியன் எம்.எல்.ஏ.	(இ) 433 ஐட்ஜ்மெண்ட் மறு பரிசீலனை செய்யப்பட்டு 161, 76-ல் ஜனாதிபதியும் கவர்னரும் அமல் படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.	மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ஆயுள் தண்டனை கொடுத்திருந்தால் அதைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக ஒரு இனடர் பிரடேஷன் இருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு உறுப்பினர் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டு பரிசீலிக்கப்படும்.

குழுவின் குறிப்புரை.

அரசு எடுத்த நடவடிக்கை.

(6)	(7)
மாநில அரசுத் தலைமை வழக்குரைஞரின் பதில் கிடைத்தபின் மேற்கொண்டு நடவடிக்கையை அரசு தொடரும். இது குறித்து தற்போதைய நிலை என்ன?	13—12—1978-க்குப் பிறகு ஆயுள் தண்டனை அடைந்த நிலைகுற்றவியல் முறைச்சட்டம் 433 (பி) பிரிவின்படி, முன் விடுதலை செய்வது குறித்து மாநில அரசு தலைமை வழக்குரைஞர் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. அதன்படி 432 பிரிவில் கண்டவற்றை எவற்றையும் கவனிக்காமல், கட்டப்படி, பல தண்டனைகளின் மரண தண்டனையும் ஒரு தண்டனையாக இருந்தால் அல்லது பிரிவு 433-ன் கீழ் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டிருந்தாலும், அந்த மாதிரி நபர்கள் குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவிக்காமல் அவர்களை முன்விடுதலை செய்ய முடியாது. இ.பி.கோ. பிரிவுகள் 232, 238, 255, 311, 329 மற்றும் 388-ல் ஆயுள் தண்டனை மட்டும் ஒரு தண்டனையாக குறிப்பிடப்பட்டுள்ளது. அம்மாதிரி பிரிவுகளின் கீழ் தண்டனை அடைந்தவர்களை மாநில அரசு குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப்பிரிவு 433-ன் கீழ் தனது அதிகாரத்தை பயன்படுத்தி, அவர்களை 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்காமலேயே முன்விடுதலை செய்யலாம். மற்றபடி மரண தண்டனை ஒரு தண்டனையாக இ.பி.கோ.வில் குறிப்பிடப்பட்டிருந்து, அதனை ஆயுள் தண்டனையாக நீதிமன்றமோ அல்லது அரசோ குறைத்திருந்தாலும் அம்மாதிரி வழக்குகளில் அந்த நபர்களை 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்காமல் முன் விடுதலை செய்ய அரசிற்கு அதிகாரம் இல்லை என்றும், இம் மாதிரி வழக்குகளில் தகுந்த வலுவான காரணங்கள் இருந்தால், இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 161-ன் கீழ் ஆளுநருக்கும், பிரிவு 72-ன் கீழ் பாரத தலைவருக்கும் மட்டும் தான் முன்விடுதலை செய்ய அதிகாரம் உள்ளது என தலைமை வழக்குரைஞர் கருத்து வழங்கியுள்ளார். இதனை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி இவ்விவரம் வழக்குகளை எல்லாம் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது.

(அ. சா. கு. எண் 84482/சிறை-சி'91-1, நாள்1

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	(3)	(4)
			பார்வை/ பொருள்.
(1)	(2)		
26.	83/91	உடுத்துறையிட்ட வினா எண். 12 திரு. சோ. இராசாராமன் எம்.எல்.ஏ. 7—9—1991.	தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசத்தில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து.

உறுதி மொழி விவரம்.

(5)

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: தஞ்சைவட்டத்தில் பாபநாசம்நகரில் உரிமையியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க உயர்நீதிமன்றம் இந்த ஆண்டு ஜூலை மாதம் பரிந்துரை செய்து இருக்கிறது. அதற்கு ஏறத்தாழ ரூ. 10 இலட்சம் செலவாகும். அதனை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

(4)

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

தஞ்சை மாவட்டம் பாபநாசம் நகரில் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றை அமைக்கும் குறிப்பை அரசு ஆய்வு கேய்து அதனை 1992-93-ம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டமாக பரிசீலிக்க முடிவெடுத்துள்ளது.

(அ. சா. கு. எண். 142077!நீ.ம.சி.!91-1, நாள் 25—10—91.)

(1)	(2)	(3)	(4)
27	94/91	உடுக்குறியிட்ட வினா 1309 திரு. வெ. தமிழரசு, எம்.எல்.ஏ. 13—9—1991.	சேலம், ஆத்தூரில் ஒரு சப்கோர்ட் ஏற்படுத்துவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பரிசீலிக்கப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

சேலம் மாவட்டம் ஆத்தூரில் ஒரு துணை நீதிமன்றம் அமைப்பது பற்றி ஆய்வு செய்து அதனை 1992—93-ம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டமாக பரிசீலிக்க முடிவெடுத்துள்ளது.

அ.சா.கு. எண். 146475/மி—91—1, நாள் : 25—10—1991.

ஊரக வளர்ச்சித்துறை.

28	10/87	சட்டமன்றப் பேரவை அ.சா.கு. எண். 12300787-4 தமிழ்நாடு சட்டமன்றப் போவை செயலகம் உறுதி மொழிக்குழு நாள். 24—7—1990.	சேலம் மாவட்டம் செட்டிச்சாவடி ஊராட்சிக்கு சேலம் ஊராட்சி பஞ்சாயத்தில் முப்பது புதிய மின் விளக்குகள்ஏறிய பொது நிதியிலிருந்து மின் கட்டணம் செலுத்துவது குறித்து.

கெட்டச்சாவடி பஞ்சாயத்தில் முப்பதுசேலம் மாவட்டத்தில் உள்ள செட்டிசாவடி பஞ்சாயத்தில் வருமானம் இல்லாததால் மின் விளக்குகள்எரியாத நிலை உள்ளது. எனவே இப் பஞ்சாயத்துக்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மின் கட்டணம் செலுத்துவது சம்பந்தமாக அறையிடமிருந்துவிவரமான பதிலை கூழு கோருகிறது.

சேலம மாவட்டத்தில் உள்ள செட்டச்சாவடி அமைக்க அனுமதிக்கப்பட்டு ,கட்டணம் செலுத்தப்பட்டு உபரி பொருட்கள் வாங்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு உள்ளது. கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் மின் கட்டணம் முத்லில் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து செலுத்தப்பட்டு பின்னர் ஊராட்சி நிதியில் இருந்து பிடித்தம் செய்யப் படுகிறது. தற்போது செட்டிச்சாவடி பஞ்சாயத்தில் தெரு மில் விளக்குகள் எரிகின்றன. ஆகவே முன்னாள் உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள உறுதிமொழி செயலாக்கப் பட்டது.

(அ.சா.கு. எண். 51813?சி-3?90-7, நாள் 30—9—1991.)

(1)	(2)	(3)	(4)
29.	315/87	சட்டமன்றப் பேரவை விதி எண். 55-ன் கீழ் கவன ஈர்ப்பு வினை திரு. மு. மாரிமுத்து, எம்.எல்.ஏ., 8—4—1987.	மதுரை கோட்ஸ் தொழிலாளர்களின் குடியிருப்பான ஹார்விப்பட்டி நகரியத்திற்கு செலவுக் கணக்கு என்று கணிசமான தொகை நிர்வாகத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டும், அந்நகரியத்திற்கு எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தரப் படாததால் மதுரை கோர்ட்ஸிலிருந்து நஷ்டஈடு பெறுவதற்குப் இனிமேலாவது அரசின் உதவியை அந் நகரியம் பெறவும் அதைப் போலவே டராமரிப்புப் பணிகள் அரசே மேற்கொள்ள இந்நகரியத்தை ஊராட்சி மன்றமாக ஆக்குவது பற்றி.

(5)	(6)
மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஹார்விப்பட்டியை தனி பஞ்சாயத்தாக ஆக்குவது பற்றி நிச்சயமாக அரசு பரிசிலிக்கும். ஏற்கனவே வேலைகளைச் செய்யாமல் முதலாளிகள் பணத்தை எடுத்துக் கொண்டிருந்தால் அப்பணத்தை திரும்பப்பெற அரசு நடவடிக்கை எடுக்கும்.	ஹார்விப்பட்டி நகரியத்தை திருப்பரங்குன்றம் பேரூராட்சியுடனோ அல்லது திருநகர் பேரூராட்சியுடனோ சேர்க்க மேற்படி இரண்டு பேரூராட்சி மன்றங்களும் விரும்பவில்லை. மேலும் ஹார்விப்பட்டி நகரியத்தை பேரூராட்சியாக தரம் குறைப்பது சம்பந்தமாக தேவையான செயற் குறிப்பு ஏதும் வரப்பெறவில்லை. நகரியத்தை பேரூராட்சியாகவோ அல்லது ஊராட்சியாகவோ தரம் குறைக்கச்சட்டத்தில் இடமில்லை ஹார்விப் பட்டி நகரியத்தில் தற்போது மதுரை கோட்ஸ் நிறுவன தொழிலாளர்கள் அதிக அளவில் குடியிலாமையால் மேற்படி நிறுவனம் வசதிகள் செய்துதர கடமைப்பட்டிருக்கவில்லை. தற்போது தெருவிளக்குக் கம்பங்கள் பாதாள சாக்கடைகள், பேரூராட்சி அலுவலக, கட்டிடம் போன்ற சொத்துக்கள் இன்னமும் மதுரை கோட்ஸ் நிறுவனத்தின் பெயரில் இருந்துவருவதால் முதலாளிகள் பணத்தைச் செலவழிக்காமல் வையாடல் செய்தார்கள். அப்பணத்தை திரும்பப் பெறவேண்டும் என்ற பிரச்சினை எழ வாய்ப்பில்லை.

(அ.சா.கு. எண் 667730/சி-187-15 நாள்: 5—3—1991).

(1)	(2)	(3)	(4)
30	297/89	உடுக்குறியிட்ட வினா எண். 308 துணை வினா திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ., 8—4—89.	பெண்களுக்கு எப்படி வேலையில் 30 சதவிதிதம் என்று வைத்து இருப்பது போல் பஞ்சாயத்து பஞ்சாயத்துயூனியன், சட்டமன்றம் ஆகியவற்றிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தல் குறித்து.

(5)	(6)
மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி: இது குறித்து விரைவிலே அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்து முடிவு செய்யப்படும்.	குழுவின் குறிப்புரை: (14-7-90) பெண்களுக்கு வேலையில் முப்பது சதவிதிதம் என்று வைத்திருப்பதுபோல் பஞ்சாயத்து, பஞ்சாயத் யூனியன்; சட்டமன்றம் ஆகியவற்றிலும் பெண்

களுக்கு இட ஒதுக்கீடு செய்வது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா? பஞ்சாயத்து யூனியனிடமிருந்து பெற்ற பதிலில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. குறிப்பான, தெளிவான, தன்னிறைவான பதில் தேவை.

மேலும் அத்துறையிடமிருந்து வந்த பதில்:

பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரை ஊராட்சியின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 30 சதவிகிதம் பெண்களுக்கான ஒதுக்கப்படுதல் வேண்டும் எனவும், அவர்களுக்கான சிற்றொகுதிகளை (Wards) ஆய்வாளர் நிர்ணயம் செய்ய வேண்டுமென 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம்) சட்டத்துக்கு 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம்) சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களில் பெண்களுக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு செய்வதற்கான சட்டத் திருத்தம் அமைச்சரவையில் முதலில் முடிவு செய்யப்பட்டு, பின்னர் சட்டப் பேரவையில் விவாதத்திற்குப் பின் இறுதியாக சட்டமியற்றப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய தற்போது வழிவகை இல்லை. அதே போன்ற மக்களவை மற்றும் சட்டப் பேரவைகளுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு செய்ய இந்திய அரியலமைப்புச் சட்டத்தில் வழிமுறை இல்லை. மேலும், இதுகுறித்து மைய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்.

(ஊரக வளர்ச்சித் துறை, அ.சா.கு. எண். 61837/சி-1/90-1, நாள் 22—10—90).

(1)	(2)	(3)	(4)
31	184/90	மாணியக் கோரிக்கை எண். 31—டமுங்குடியினர் முதலியோர் நலன்மீது விவாதம் திரு. வி. தம்புசாமி, எம்.எல்.ஏ., 29—3—1990.	தொகுப்பு வீடுகள் கூட்டுகிறபோது கதவு பொருத்துவது குறித்து.

(5)	(6)
மாண்புமிகு திரு. கோ. சி. மணி:—இந்த ஆண்டு கட்டப்படுகிற புதிய தொகுப்பு வீடுகள் அத்தனைக்கும் கான்கிரீட் நிலையும் 20 கேஜ் உள்ள தகர சீட்டும் போர்ட்டு கதவுகள்தான் வைக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க இருக்கிறோம்.	1990—91-ம் ஆண்டில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு மரத்தாலான நிலை 5ற்றும் கதவு வைக்காமல் கிமெண்ட் கான்கிரீட்டால் ஆன நிலையும் 20 கேஜுக்குக் குறையாமல் உள்ள தகடுகளைக் கொண்ட ஸ்டீல்கதவுகளும் அமைக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. (அ. சா. கு. எண். 23331/ 2/91-1, நாள் : 29—4—1991.)

கல்வித்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
32	133/85	1985—86 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியத்தின் மீதான பொது விவாதத்திற்குப் பின் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின்	மாண்புமிகு திரு. சே. அரங்கநாயகம்: 10 (ஏ) (1) என்ற விதியின் கீழ் இன்றைக்குப் பல்வேறு அரசு நிறுவனங்களில் ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இதை முக்கியப் பிரச்சினையாக வைத்துத்தான் இன்றைக்கு ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தேர்வாணைக்	ஆசிரியர் சங்கக் கோரிக்கைகளின் அடிப்படையில் 1970-ஆம் ஆண்டு முதல் அரசு உயர் நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணியாற்றும் முழுத் தகுதி பெற்ற பள்ளி உதவி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்கள் ஆகிய

பதிலுரை.
11—4—1985.

குழுவிலே 1,800 பேர்கள் இன்றைக்கு ஆசிரியர்கள் கலந்து கொண்டதில் 800 பேர்கள் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1,000 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தினால் 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் பணியாற்றிய அவர்கள் இன்றைக்கு அல்லல்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை வைத்துத்தான் இன்றைக்குப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பிரச்சினையையும் அரசு பரிசீலிக்கும் என்கிற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோர்களில், அரசுத் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்படாதவர்களின் பணியினை வரன்முறை செய்ய ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

13 458/85 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 55-ன் கீழ் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் திரு. என். எஸ். வி. சித்தன், எப்.எல்.ஏ., 19—7—1985.

மாண்புமிகு செ. அரங்கநாயகம் : மாநிலம் முழுவதும் 30—11—84 அன்றைய நிலைப்படி 1,265 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். மனிதாபிமான அடிப்படையில் தற்காலிகமாகப் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு அளித்து பணி நிரந்தரம் செய்யக்கோரி ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கைகள் விடுத்துள்ளார்கள். இவர்களது பணியை நிரந்தரம் செய்வது குறித்த கருத்து அரசின் ஆய்வில் உள்ளது.

(கல்வி அ.சா.கு. எண். 70631/எம் 2/91-1, நாள் : 7—10—1991.)

115

(1) (2) (3) (4)

34 567/86 உடுக்குறியிட்ட வினா எண். 5322, திருமதி பா. வளர்மதி, எம்.எல்.ஏ. 18—11—1986. துணை வினா பாடப்புத்தகங்களை பத்தாம் வகுப்பு வரையில் இலவசமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பது பற்றி.

(5) (6)

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : பிறகு ஆய்ப்படும்.

அரசாணை 629, கல்வி, நாள் 17—6—1985-ன் படி முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் மூலம் 1 முதல் 8 வகுப்பு முடிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு மட்டும் இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இதனால் 4,69,115 பேர்கள் பயனடைகின்றனர். இத்திட்டத்தை 9 மற்றும் 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நீட்டிப்பதால் அரசுக்கு அதிக செலவு ஏற்படுகின்றது. எனவே தற்போதுள்ள நிதிநிலை காரணமாக 9 மற்றும் 10 ஆம் வகுப்பு களுக்கு இலவச பாடப்புத்தக திட்டம் நீட்டிக்க இயலாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 12026/இயு-I/91-1, நாள் : 4—3—1991).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	உறுதிமொழி விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
35	347/89	உடுக்குறியிட்ட வினா எண் 1223, திரு. என். டி. உகம்சந்த்., எம்.எல்.ஏ., 1—11—1988.	தமிழ் நாட்டில் ஐ.ஏ.எஸ்., அதிகம் பேர் தேர்வு பெற திட்டம் குறித்து.	தேர்வில் மாண்புமிகு முதலமைச்சர்: எண்ணிக்கை குறைவாக இருப்பதன் காரணங்களை ஆராயும் பொருட்டு நியமித்துள்ள குழுவின் பரிந்துரைகள் அரசின் கல்வித் துறையால் பரிசீலிக்கப்பட்டு தகுந்த முடிவெடுக்கப் படும்.

குழுவின் குறிப்புரைகள்.	குறிப்புரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)	(7)
16—7—1990 அன்று நடைபெற்ற குழுவின் குறிப் புரை சென்னை மாநிலக் கல்லூரியில் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டு விட்டதா? உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் பற்றி கல்லூரிகளில் செயல் படுத்தப்படுகின்றனவா என்பது கண்காணிக்கப் பட்டு வருகிறதா?	அரசு உறுதி மொழி எண். 347/89 க்கு பார்வை (1) ல் அனுப்பிய பதிலினைத் தொடர்ந்து சட்ட மன்றப் பேரவை மேலும் கூடுதல் விபரங்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து பெற்ற கீழ்க்கண்ட விபரங் களை சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பலாம்.

சென்னை மாநிலக் கல்லூரியின் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். தேர்வுக் கான பயிற்சி வகுப்புகள் கடந்த ஆண்டிலிருந்துவங்கப்பட்டுவிட்டது. சென்னை மாநிலக் கல்லூரியில் இப்பயிற்சி வகுப்புகள் துவக்கப் பட்டிருப்பது ஒரு முதற்கட்ட முயற்சியாகும். இம்முயற்சியின் விளைவினைப் பரிசீலித்து இவ்வகை பயிற்சி வகுப்புகளை அடுத்த கட்டமாக தன்னாட்சி அந்தஸ்து பெற்ற கோவை அரசு கல்லூரி மற்றும் குடந்தை அரசு ஆடவர் கல்லூரிகளில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பின்னர் படிப்படியாக வரும் கல்வி ஆண்டுகளில் முதனிலை (Grade 1) பட்ட மேற் படிப்பு அரசு கல்லூரிகளிலும் இப்பயிற்சி வகுப்புகள் திறக்கப் படும்.

2. உயர் மட்டக்குழுவின் பரிந்துரைகள் பற்றி கல்லூரிகளில் செயல் படுத்துதல் தொடர்பாக அனைத்து கல்லூரிகட்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவ்வாறு செயற்படு வதாக பல கல்லூரிகளிலிருந்து அறிக்கைகளும் பெறப்பட் டுள்ளன என்றும் இப்பொருள் குறித்து தொடர் நடவடிக்கை கள் கல்லூரிக் கல்வி இயக்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது எனவும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(அ.சா.கு. எண். 120466/ஜி2/89-4, நாள் : 2—1—1991

(1)	(2)	(3)	(4)
36	118/90	உடுக்குறியிட்ட வினா எண் 3091, துணை வினா திரு. எஸ். எஸ். தென்னரசு, எம்.எல்.ஏ., 23-3-1990.	மதுரை விளையாட்டு அரங்கத்திற்கு முதலமைச்சர் கலைஞரு டைய பெயர் வைக்கப்பட்டிருந்தது. எமர்ஜென்சி நேரத்தில் அந்தப்பெயர் அகற்றப்பட்டது. மறுபடியும் அந்தப் பெயரை வைப்பதற்கு ஆவன செய்யுமா என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	எடுக்கப்பட்ட நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன், ஏற்கெனவே வைக்கப்பட்ட எந்த பெயரானாலும் இடைக் காலத்திலே நீக்கப்பட்டிருக்குமேயானால் அது தொடர்வதற்கு இன்றைக்கு வழி இருக்கிறது. உரிய ஆணை வெளியிடப்படும்.	மதுரை ரேஸ்கோர்ஸ் விளையாட்டு அரங்கத்திற்கு முன்னாள் முதலமைச்சர் திரு. கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயர் மீண்டும் வைக்கப்பட்டுவிட்டது. உரிய ஆணை அரசாணை நிலை எண். 908, கல்வி நாள் 29-6-1990-ல் வெளியிடப்பட்டு விட்டது.
			(கல்வித்துறை அ.சா.கு. எண். 53730/ஒப்.2/90-8, நாள் 22-2-1991.
(1)	(2)	(3)	(4)
37	119/90	உடுக்குறியிட்ட வினா எண். 6470 துணை, வினா திருமதி பாப்பா உமாநாத், எம்.எல்.ஏ., 28-3-1990.	புத்தனாம்பட்டி தனியார் கல்லூரியை அரசு ஏற்று நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் அனைத்து விவரங்களும் ஆராயப்பட்டு சட்டப்படி என்ன செய்ய முடியும் என்பது பரிசீலிக்கப்படும்.	புத்தனாம்பட்டியிலுள்ள நேரு மெமோரியல் தனியார் கல்லூரி யின் நிர்வாகக் குழுவில் உள்ள இரு பிரிவினர் ஒருவர் மீது ஒருவர் வழக்குகள் தொடுத்துள்ளனர். இவ் வழக்குகள் முடி வாகாததால் ஆசிரியர்கள் நலன் கருதி அவர்களது ஊதியங் களை பெற்று பட்டுவாடா செய்ய திருச்சி மண்டல கல் லூரிக் கல்வி துணை இயக்குநருக்கு கல்லூரிக் கல்வி இயக்குநரால் அதி காரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே இக்கல்லூரியை அரசு ஏற்கத் தேவையில்லை என்றும் இக்கல்வியாண்டு முடியும் வரை தற்போதுள்ள நிலைமையே தொடர்ந்து இருந்து வர லாம் எனவும் அரசு முடிவெடுத்துள்ளது.
			(கல்வித்துறை அ.சா.கு. எண். 53717/இசட். 3/90-2, நாள் : 9-11-1990.
(1)	(2)	(3)	(4)
38	254/90	உடுக்குறியிட்ட வினா எண். 7565, துணை வினா திரு. அ. லெ. சுப்பிரமணியன், எம்.எல்.ஏ., 6-4-1990.	மதுரை-காமராஜ் பல்கலைக்கழக செனட், சிண்டிகேட் அமைப்பு கள் இயங்குவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம் (5)	துறையின் குறிப்பு. (6)
மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : அரசாங்கம் அது குறித்து ஆலோசனை செய்து வருகிறது. சட்டத்துறையோடு கலந்துபேசி வருகிறது. விரைவாக செயலாற்றுவதற்கு முயற்சிக்கப்படும்.	மதுரை காமராஜ் பல்கலைக்கழக சிண்டிகேட், சென்ட் மற்றும் அகடமிக்கவுன்சில் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்! நியமன உறுப்பினர்களுடன் தற்போது செயல் பட்டு வருகிறது.

1981 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட வழக்கின் மீது இவ்வாண்டு உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணைகளுக்கு ஏற்ப, பட்டதாரி தொகுதியிலிருந்து 15 உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான வாக்கு எண்ணிக்கை 1990 ஏப்ரல் 12, 13 தேதிகளில் நடைபெற்று அதன் முடிவுகளும் அறிவிக்கப்பட்டன. 21—4—1990 -ல் நடைபெற்ற ஆட்சிக்குழு தீர்மானத்திற்கு இணங்க, பேரவைக்குழு, ஆலோசனைக்குழு மற்றும் அதன் மீதான நிலைக்குழு ஆகியவற்றிற்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. மேலும் ஆட்சிக்குழுவில் 3 இடங்களுக்கான தேர்தல் 24—7—1990-ல் நடத்தது. பேரவைக்குழுவிலிருந்து 4 உறுப்பினர்களுக்கான தேர்தல் 31—7—1990-ல் நடந்துள்ளது. தற்போது மதுரை காமராஜ் பல்கலைக்கழகக் குழுக்கள் அனைத்தும் முழு அளவு உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. எனவே உறுதி மொழி நிறைவேற்றப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 58739/ஆர்டி. -1190/6, நாள் : 26—12—1990

18

கல்வித்துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
39	486/90	உடுக்குறியிடாத வினா எண் 8094, திரு. எம். முகம்மது ஷித்திக், எம்.எல்.ஏ., 12—6—1990.	பூம்புகார் தொகுதியில் உள்ள திருக்களாச்சேரி தேசிய உயர் நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன் வருமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : உயர்மட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப அரசால் பரிசீலிக்கப் படும்.	பூம்புகார் தொகுதியில் உள்ள திருக்களாச்சேரி தேசிய உயர்நிலை பள்ளியை 1990—91 ஆம் கல்வியாண்டில் மேலமல்நிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துருக்கள் பெறப்படவில்லை. எனவே இப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படவில்லை.

(அ.சா.கு. எண். 64544/மேநிக. 2/90—5, நாள் : 1—2—1991.)

(1)	(2)	(3)	(4)
40	525/90	உடுக்குறியிடாத வினா எண் 8276	.. மொரப்பூர் தொகுதியிலுள்ள தொங்கனூர் நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்படுமா என்பது குறித்து.

(5)

1990–91 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த கருத்துரு பெறப்பட்டுள்ளது. இது உயர்மட்டக் குழுவின் பரிந்துரையில் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

1990–91-ம் புதிய உயர்நிலைப்பள்ளிகள் ஆரம்பித்தலுக்கான உயர் மட்டக்குழுவின் பரிந்துரையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தொங்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆணை எண் 832/கல்வி நாள் 19–6–1990-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண் 92493/இ1/90- நாள் :

கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத்துறை.

இணைப்பு 1.

(1)	(2)	(3)	(4)
41	240/89	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலக அ.சா.கு. எண். 11940/89-2/உறுதிமொழிக்குழு/ நாள் : 27–6–1989 மற்றும் 26–10–1989.	மீனவர் நலம் மற்றும் மாலிய க்கோரிக்கை எண் 21-ன் மீதான விவாதத்துக்கு பாண்புமிகு அமைச்சர் (கால்நடை பராமரிப்பு அவர்களின் பதில் உரை.

உறுதிமொழி விவரம்.

துறை எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. க. சந்திரசேகரன் : நடப்பாண்டில் (1989–90) 3,000 வீடுகள் மீனவர் கட்டு இலவசமாக கட்டிக் கொடுக்கப்படும்.

மீனவர் இலவச வீட்டுத் திட்டத்தின் கீழ் 3,000 வீடுகள் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன.

உறுதிமொழிக் குழுவின் கருத்து.

குழுவின் கருத்து மீது மேல்விவர.

(7)

(8)

மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் குழு கோரிய விவரம் இணைப்பு-2ல் தரப்படுட்டின் கீழ் 1989–90 நிதி ஆண்டில் 3,000 வீடுகள் எங்கெங்கு கட்டப்பட்டுள்ளன விவரம் தேவை,

அ.சா.கு. எண் 4101/மீ3/91–1 கால்நடைபராமரிப்பு & மீன் துறை நாள் 22–2–1991.

(1)	(2)	(3)	(4)
42	77/90	உடுக்குறி இடாத வினா எண் 1677, திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 27–990.	தஞ்சை மாவட்டம் மீன்பிடி விசைப்படகுகளை நீரூத்திலைவக்க ஏதுவாக கட்டப்பட்ட மல்லிப்பட்டினம் துறைமுகத்தில் மணலை அகற்றும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் சந்திரசேகரன் : அரசின் பரிசீலனையில் உள்ளது.

இக்கருத்து மல்லிப்பட்டிணம் உள்பட இதர மீன்பிடித்துறைமுகங்கள் மற்றும் தேவணித்துறைகளிலுள்ள மணலை தூர் வாரும் பணிகளுக்கான செலவினத்திற்கு நிதியுதவி கேட்டு மைய அரசிற்கு 4-6-1990 ஆம் நாளன்று எழுதப்பட்டபோது மைய அரசு மேலும் கூடுதல் விவரங்களை அளிக்குமாறு கேட்டது. மைய அரசு கோரிய விவரங்களைத் தொகுத்து அனுப்புமாறு மீன்துறை ஆணையரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. மீன்துறை ஆணையாளர் 23-8-91ல் அனுப்பிள்ள அறிக்கையில் மைய அரசு கோரியிருந்த கூடுதல் விவரங்கள் மீன் துறையின் சார்நிலை அலுவலர்களிடம் கேட்கப்பட்டுள்ளன என்றும் அவ்விவரங்கள் கிடைக்கப்பெற்றவுடன் அரசுக்கு விரைவில் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்துள்ளார். இருப்பினும், மைய அரசு 25-2-1991-ல் அனுப்பியிருந்த கடிதத்தில் புதுடில்லியில் உள்ள வோவே இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை நாட்டிலுள்ள மீன்பிடித்துறைமுகங்களில் தூர்வாரு தேவைகள் பற்றி மதிப்பிடுவதாக மைய அரசு நியமித்துள்ளதாகவும் இதிலுள்ள சிரமங்களைக் கண்டறிந்து அவற்றைப போக்குவதற்கான வழிமுறைகளை அந்நிறுவனம் பொறிசெய்யுமென்றும் தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் கிழக்கண்ட ஏற்கனவே இயங்கிவரும் தற்போது கட்டப்பட்டு வரும் மீன்பிடித்துறைமுகங்கள் இந்நிறுவனத்தின் ஆய்விற்கு விடப்பட்டுள்ளன எனறும் தெரிவித்துள்ளதாக மீன்துறை ஆணையாளர் கூறியுள்ளார் :—

ஏற்கெனவே இயங்கிவரும் மீன் பிடித்துறைமுகங்கள்.	தற்போது கட்டப்பட்டு வரும் மீன் பிடித்துறைமுகங்கள்.
(1)	(2)
தூத்துக்குடி மல்லிப்பட்டிணம் கோடியக்கரை பழையாறு தொண்டி.	சின்னமுட்டம், வாலிநோக்கம்.

மேற்படி நிறுவனம் இம்மீன்பிடி துறைமுகங்களின் தூர் வாரும் தேவைகள் பற்றி ஆராய இவ்விடங்களுக்குச் சென்று பார்வையிட்டு மைய அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது. இவ்வறிக்கையின் மீது மைய அரசின் முடிவு இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

இதற்கிடையில் மல்லிப்பட்டிணம் மீன் பிடித்துறைமுகத்தில் தூர் வாருவதைப் பொறுத்தமட்டில் மல்லிப்பட்டிணம் மீன்துறை உதவி இயக்குநர் கிழக்கண்டவாறு அறிக்கை அனுப்பியுள்ளதாக மீன் துறை ஆணையாளர் தெரிவித்துள்ளார். மல்லிப்பட்டிணத்தில் சுமார் 562 படகுகள் இயங்குகின்றன. இங்குள்ள ஜெட்டியின் ஆழம் தாழ்வான அலையில் 1.5 மீட்டர் உயரமான அலையில் 2 மீட்டர் ஜெட்டியில் தூர்வாரும் பணி மிகவும் அவசரமான ஒன்று இல்லை. மேலும் கோரிக்கைகள் எவையும்

இதுவரை மீனவர்களிடமிருந்து பெறப்பட இல்லை. மேற் கூறிய நிலையில் பல்வேறு மீன்பிடித்துறைமுகங்கள் மற்றும் ஜெட்டிகளின் தூர் வாரும் தேவை பற்றிய ஹோவே இந்தியா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு அறிக்கையின்மீது மைய அரசு முடிவெடுத்தபின் மல்லிப்பட்டி ணம் ஜெட்டியில் தூர் வாரும் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்று மீன்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

(அ.சா.கு. எண். 8106/மீன் 6/90-4, நாள்: 2-9-1991)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை	பொருள்
(1)	(2)	(3)	(4)
43	115/90	உடுக்குறியிட்ட வினா எண். 4397, திரு. கோ. வீரையன், எம்.எல்.ஏ., 22—3—1990.	புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடுகளுக்கு அம்மை நோய்த் தடுப்பூசி போட்டதால் இறந்த ஆடுகளின் சொந்தக்காரர் களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	உறுதிமொழியின் மீது அரசு எடுத்த நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம் மூலமாகவும் மற்ற திட்டங்கள் மூலமாகவும் வங்கிக் கடன் அடிப் படையில் மான்யத்தோடு ஆட்டு அலகுகள் வழங்கப்படும் கருத்து பரிசீலனையில் உள்ளது.	புதுக்கோட்டை மாவட்டத்தில் 878 ஆடுகள் இறந்தன. அவைகளில் 6 நபர்கள் 106 ஆடுகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டு இருந்ததால் காப்புறுதி கழகத்திடமிருந்து நட்ட ஈடு பெற முடிந்தது. 772 ஆடுகளின் 70 சொந்தக்காரர்கள் காப்புறுதி செய்யப்படாததால் காப்புறுதி நட்ட ஈட்டுத் தொகை பெற முடியவில்லை. இறந்த ஆடுகளுக்கு நட்டஈடு வழங்க அரசு விதிகளில் இடமில்லை.
			(அ.சா.கு. எண். 14666/தா.ப.2/90-8, நாள் 12—3—1991.)
(1)	(2)	(3)	4
44	125/90	உடுக்குறியிட்ட வினா எண். 3777, துணை வினா, திரு. ஜி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ., 23-3-1990	முத்துப்பேட்டை தொண்டியக்காடு போன்ற பகுதிகளில் இறால் வளர்ப்பு இடங்களை அரசு எடுத்துக் கொள்ளுமா என்பது குறித்து
		உறுதிமொழியின் விவரம்	அரசு எடுத்துள்ள நடவடிக்கை
		(5)	(6)
		மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய யோசனை மீன் வளர்ச்சித் துறைக்கு அனுப்பி வைக்கப்படும்.	தொண்டியக்காட்டில் மாதிரி இறால் பண்ணை அரசால் ஏற்படுத் தப்பட்டு செயல்பட்டு வருகிறது. புதிதாக வேறு எந்த ஒரு திட்டமும் இப்பகுதியில் இறால் வளர்ப்புப்பணி மேற்கொள்ள

தற்போது இல்லை. அரசு ஆணை நிலை எண். 510, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன், நாள் : 30—10—1989-ன்படி. இறால் வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து உவர் நீர் பரப்புகளை குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய விண்ணப்பங்கள் பெறப்பட்டு அரசு அமைத்த உயர்மட்டக் குழுவினர் பரிசீலித்து நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மற்றும் இந்த அரசாணையின் அடிப்படையில் தொண்டியக்காடு மற்றும் முத்துப்பேட்டை ஆகிய இடங்களில் உவர் நீர் பரப்பு இறால் வளர்ப்பிற்கு குத்தகைக்கு விடப்படவில்லை.

(அ.சார்.கு. எண். 14984!மீ.4-1!90-5, நாள் : 27—2—1991.)

45 144!90 உடுக்குறியிட்ட வினா எண். 2177 துணை வினா திரு. சோ. அழகர்சாமி, எம்.எல்.ஏ., 24-3-1990

பம்பாய் பால் பண்ணையைப் போல் முன்மாதிரியான பால் பண்ணையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

மாண்புமிகு திரு. கே. எஸ். நேரு : பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் சோளிங்கநல்லூரில் பால் பண்ணை அமைய இருக்கிறது.

(6)

மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் கொள் திறன் கொண்ட புதிய பால் பண்ணை ஒன்று சோளிங்கநல்லூரில் ரூ. 1,155.50 இலட்சம் செலவில் அமைக்க தேசிய பால்வள வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. நிதி ஒரளவில் பெறப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது.

(அ.சா.கு. எண். 20238!பாஉ1!90-2, நாள் : 23—11—1990.)

(1) (2) (3) (4)

46 251!90 கால்நடை நிட்டங்கள் பற்றிய மானியக் கோரிக்கை எண் 22-இன் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

பால் உற்பத்தியாளர்கள் பணம் எந்தந்த மாதத்தில் பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற குறையை ஆய்வு செய்து உடனடியாக விவசாயிகளுக்கு அந்தந்த மாதத்தில் அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படும்.

(5)

பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வாரந்தோறும் அல்லது இரண்டு வாரங்களுக்கொருமுறை பணம் பட்டுவாடா செய்யப்படுகிறதா என்பதை கவனிக்கு பாறு, அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் நிர்வாக இயக்குநர்கள் பொது மேலாளர்கள் தக்கவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இணையத்திற்கு மாவட்ட ஒன்றியங்கள் வழங்கிய பாலுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள அட்டவணைப்படி, இணையம் மாவட்ட ஒன்றியங்களுக்கு பணம் பட்டுவாடா செய்கிறது.

(அ) மாதத்தில் முதல் வாரத்தில் வழங்கிய பாலுக்கு ஒவ்வொரு மாதமும் 10-ஆம் தேதியன்று,

(ஆ) மாதத்தில் 2-ஆவது வாரத்தில் வழங்கிய பாலுக்கு ஒவ்வொரு மாதமும் 17-ஆம் தேதியன்று.

(இ) மாதத்தில் 3-ஆவது வாரத்தில் வழங்கிய பாலுக்கு ஒவ்வொரு மாதமும் 24ஆம் தேதியன்று.

(ஈ) மாதத்தில் 4-ஆவது வாரத்தில் வழங்கிய பாலுக்கு அடுத்த மாதம் 3-ஆம் தேதியன்று.

தங்களிடமுள்ள மிருதியான பாலை அருகேயுள்ள ஒன்றியங்களுக்கு வழங்கும் சிறிய மாவட்ட ஒன்றியங்கள், நிர்வாக முறை காரணமாக, நிதிநிலைமைப் பிரச்சினையால் பாதிக்கப்படுகின்றன. அத்தகைய சிறிய ஒன்றியங்களுக்கு, தங்களுடைய சங்கங்களுக்கு பால் பணம் பட்டுவாடா அந்தந்த மாதத்திலேயே செய்யும் பொருட்டு, இணையம் முன்பணம் வழங்குகிறது.

தற்போது விவசாய உறுப்பினர்களுக்கு அந்தந்த மாதத்திலேயே பால் பணம் முறையாக வழங்கப்படுகிறது. மேலும் மாதந்தோறும் இணையத்தில் நடைபெறும் நிட்ட செயற்குழு கூட்டத்திலும், மேற்சொன்ன ஏற்பாடுகள் முறையாக செய்யப்பட்டு வருகிறதா என்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

(அ.சா.கு. எண். 21333/பா2.1/90-3. நாள் : 10—12—1990.)

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.

(1)	(2)	(3)	(4)
47	257/89	உடுக்குறியிட்ட வினா எண். 3501 துணை வினா திரு. துரைராமசாமி, எம்.எல்.ஏ., 5—5—1989.	வெள்ளக்கோயில் நெருநியில் சேனாபதிபாளையம் என்ற தனி ரெவின்யூ கிராமத்திற்கு இதுவரையில் ரேஷன் கடையே திறக்கப் படாமலிருக்கிறது. அங்கு கடை திறப்பதற்கு அரசு முன்வருமா என்கின்ற விவரம் குறித்து.

(5)

மாண்புமிரு திரு. ஆற்காடு நர. வீராசாமி : உறுப்பினர் சொன்ன அந்த ரெவின்யூ கிராமத்திற்குத் தனியாகக் கடை இல்லையென்றால் அரசாங்கம் நிச்சயமாக தனியாக ஒரு கடையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யும்.

(6)

காங்கேயம் வட்டம், சேனாபதிபாளையத்தில் தற்போது 2 அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. சேனாபதிபாளையம் கடை எண். 1, வேலப்பநாயக்கன் வலசுமஜராவிலும் சேனாபதி பாளையம் கடை எண். 2, சேனாபதிபாளையம் வருவாய் கிராமத்திலேயும் செயல்பட்டு வருகின்றன.

(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, அ.கா.கு. எண். 47461/எப்.1/89-10, நாள் : 29—10—1990.)

(1)	(2)	(3)	(4)
48	32/90	உடுக்குறியிட்ட வினா 4098 திரு. கே. ரமணி, எம்.எல்.ஏ., 20—1—1990.	தூண்டிப்புதூரில் உள்ள கடலை எண்ணை உற்பத்தி ஆலைக்கு அவசர நிலையாக கருதி, இயந்திரங்களை பாதுகாக்க துப்புறவு வேலை உடனே செய்ய அரசு முன்வருமா என்பது குறித்து.

(1)	(2)	(3)	(4)
49	92/90	உடுக்குறியிட்ட வினா எண். 3839 திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, எம்.எல்.ஏ. 20—3—1990.	பரமகுடியில் துணைக் கூட்டுறவு பதிவாளர் அலுவலகத்தை உருவாக்க முன்வருமா என்பது குறித்து.

(5)

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அவசர அவசிய கருத்துக்களின் அடிப்படையில் அரசு உடன் பரிசீலனையை மேற்கொள்ளும்.

(6)

எண்ணெய் பிழியும் எந்திரங்கள், சுத்திகரிக்கும் எந்திரங்கள், கொதிகலன் ஆகிய அனைத்தும் பழுது பார்க்கப்பட்டு செயல் படக் கூடிய நிலையில் உள்ளன. ஆலை வளாகம் அவ்வப் போது துப்புரவு செய்யப்படுகிறது. ஆலை தடையின்றிச் செயல் படத் தொடங்கும்போது, அனைத்து எந்திரங்களும் பழுதின்றிப் பேணப்படும்.

(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை : அ.சா.கு. எண். 1587 6/சிஎ1/90-3, நாள் : 1—10—1990.)

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தெரிவிக்கின்ற தேவையின் முக்கியத்துவம் கருதி இது அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

பரமகுடியில் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் அமைப்ப தற்கு உண்டான கருத்துருவை பரிசீலனை செய்யப்பட்டது. இப் போது நிதி நெருக்கடி நிலைமை உள்ளதால், 1991—92 ஆண்டின் பகுதி 2 திட்டத்தின் கீழ் சேர்ப்பதற்கு தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

(அ.சா.கு. எண். 25491/சி.எல்.2/90-3, நாள் : 3—1—1991.)

(1)	(2)	(3)	(4)
50	46/91	உடுக்குறியிட்ட வினா எண். 11388 நமது வினா திரு. கோ. வீரையன், ச.ம.உ., 25—1—1991.	தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களிலேயே பயறு, உளுந்து ஆகியவைகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்து தரப்படுமா என்பது குறித்து.

(5)

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : நேரடி கொள்முதல் நிலையங்களில் பயறு வகைகளைக் கொள்முதல் செய்வதா அல்லது வேறு ஏற்பாடு கள் செய்வதா என்பதை அரசு பரிசீலித்து முடி வெடுக்கும்.

(6)

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு வழங்கு வதற்கும் சத்துணவுத் திட்டம் போன்ற நல்வாழ்வு திட்டங்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கும் மாதம் ஒன்றுக்கு 1.65 லட்சம் மெட்ரிக் டன் அரிசி தேவைப்படுகிறது. ஆனால், மத்தியத் தொகுப்பிலிருந்து மாதம் ஒன்றுக்கு 75,000 டன் அரிசி மட்டுமே ஒதுக்கப்படுகிறது. எனவே, நெல்லை நேரடி கொள்முதல் செய்ய வேண்டியிருப்பது தவிர்க்க முடியாததாகிறது. ஆனால், உளுந்து போன்ற பயறு வகைகளை கொள்முதல் செய்வதென் பதற்கு தேவை எழுவில்லை. அதிலும், புஞ்சை பயிர் களை நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யும் அளவுக்கு தமிழ்நாட்டில் உற் பத்தியில்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனக்குத் தேவையான பயறு வகைகளை டெண்டர் மூலமாக வெளிச்சந்தையில் பெற்றுக் கொள்கிறது.

(கூ.உ.ம.நு.பா. துறை அ.சா.கு. எண். 9884/பி1/91-1, நாள் : 18—3— 1991.)

கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்துறை.

(1)	(2)	(3)	(4)
51	342/89	உடுக்குறியிட்ட வினா எண் 3122, துணை வினா திரு. எல். மூக்கையா, எம்.எல்.ஏ., 31-10-1989.	பெரியகுளம் பகுதியில் ஆயிரக்கணக்கான நிலப்பகுதியில் மாம்பழம் விளைவதால் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்குட் செயற்குறிப்பு குறித்து.

(5)

மாண்புமிகு திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன் : அரசு உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலிக்கும்.

(6)

பெரியகுளம் பகுதியில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு தேவையான அளவு மூலப்பொருட்கள் ஆண்டு முழுதும் ஒரே சீரான அளவில் கிடைக்க வாய்ப்பில்லாததாலும் பழப்பக்குவ அலகு ஆரம்பித்தால் அவை லாபகரமாக இயங்க வாய்ப்பில்லை. இதனை தவிர்ப்பதற்கு வாரிய அலகுகள் ஆரம்பிப்பதற்கு பதிலாக தனி நபர்களுக்கு பழப்பக்குவ தொழில் செய்ய நிதியுதவி அளித்து அத்தொழில் மேம்பாடடைய செய்யப்பட்டு வரப்பட்டது. அத்துடன் சமூகநல துறை மூலம் பழப்பக்குவத் தொழில் ஆரம்பிக்க தேவையான மூலதனம் வழங்கி பழப்பக்குவ அலகு ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுவதால் இத்தொழிலை வாரியம் அலகுகள் ஏற்படுத்தி நடத்திட வாய்ப்பில்லை.

மத்திய சமூக நல வாரியம், மாநில சமூகநல வாரியம் மூலம் தொழில் வளர்ச்சிக்காக தொண்டு நிறுவனங்களுக்கு மூலதனம் வழங்கி வருகிறது. இவ்வாறு மூலதனம் வழங்கப்பட்டு வரும் தொழில்களில் ஒன்றான பழப்பக்குவப்படுத்தும் அலகு செங்கை அண்ணா மாவட்டத்தில் பெருங்களத்தூரில் உள்ள ஸ்ரீவித்யா மாதர் சங்கம் என்ற தொண்டு நிறுவனம் நடத்தி வருகிறது. இத்தொழிலுக்கு 1983 ஆம் ஆண்டில் மத்திய சமூக நல வாரியம் ரூ. 23,389 வழங்கியுள்ளது. சமூகநல வாரியம் தனிநபர் எவருக்கும் பழப்பக்குவப்படுத்தும் தொழில் அலகு ஆரம்பிக்க உதவித் தொகை வழங்கவில்லை.

(கைத்தறி, கைவினைப் பொருட்கள் துணிநூல் (ம) கதர்துறையின் அ.சா.கு. எண். 24783/பி.2/89-1, நாள் : 1—4—1991.)

(1)	(2)	(3)	(4)
52	343/89	உடுக்குறியிட்ட வினா எண். 3122 துணை வினா திரு. என். பழனிவேல், எம்.எல்.ஏ., 31-10-1989	பழனி தொகுதியில் குறிப்பாக ஆயக்குடி பகுதியிலே ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு குறித்து.

(5)

மாண்புமிகு திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன் : உறுப்பினர்களுடைய கோரிக்கை ஏற்று கொள்ளப்பட்டு அரசு அது பற்றி பரிசீலிக்கும்.

(6)

பழனி தொகுதியில் குறிப்பாக ஆயக்குடி பகுதியிலே ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு தேவையான அளவு மூலப் பொருள்கள் ஆண்டு முழுவதும் ஒரே சீரான அளவில் கிடைக்க வாய்ப்பில்லாததாலும், பழப்பக்குவ அலகு ஆரம்பித்தால் அவை நட்டத்தில் தான் இயங்க வாய்ப்புள்ளதே தவிர லாபகரமாக இயங்க வாய்ப்பில்லை.

இதனாலேயே வாரியம் அலகுகள் ஆரம்பிப்பதற்கு பதிலாக தனி நபர்களுக்கு பழப்பக்குவ தொழில் செய்ய நிதியுதவி அளித்து வருகிறது. அத்துடன் சமூக நல வாரியத்தில் பழப் பக்குவ தொழில் ஆரம்பிக்க தேவையான மூலதனம் வழங்கி பழபக்குவ அலகு ஆரம்பிக்க

(1) (2) (3) (4)

53 344/89 உடுக்குறியிட்ட வினா எண். 3122 துணை வினா திரு. மு. இராமதாஸ், எம்.எல்.ஏ., 31-10-1989. சேலம், தருமபுரி, மதுரை மாவட்டங்களில் மாம்பழம் மற்றும் இதர பழவர்க்கங்கள் கிடைப்பதால் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைப்பது குறித்து.

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுவதால் இத்தொழிலை வாரியம் அலகுகள் ஏற்படுத்தி நடத்திட வாய்ப்பில்லை. மத்திய சமூக நல வாரியம், மாநில சமூக நல வாரியம் மூலம் தொழில் வளர்ச்சிக்காக தொண்டு நிறுவனங்களுக்கு மூலதனம் வழங்கி வருகிறது. இவ்வாறு மூலதனம் வழங்கப்பட்டு வரும் தொழில்களில் ஒன்றான பழப் பக்குவப்படுத்தும் அலகு செங்கை அண்ணா மாவட்டத்தில் பெருங்களத்தூரில் உள்ள ஸ்ரீவித்யா மாதர் சங்கம் என்ற தொண்டு நிறுவனம் நடத்தி வருகிறது. இத்தொழிலுக்கு 1983—84-ம் ஆண்டில் மத்திய சமூகநல வாரியம் ரூ. 23,380 வழங்கியுள்ளது. சமூக நல வாரியம் தனிநபர் எவருக்கும் பழப்பக்குவப் படுத்தும் தொழில் அலகு ஆரம்பிக்க உதவித் தொகை வழங்கவில்லை.

[கை.கை.து. (ம) கதர் துறையின் அ.சா.கு. எண் 24782/பி.2/89-1, நாள்: 1—4—1991.]

(5) (6)

மாண்புமிகு சுப்புலெட்சுமி ஜெகதீசன் : பகம் பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் நியமத்தில் ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை இயங்கி வருகிறது. மேற்கொண்டு தொழிற் சாலை தேவைப்படுமா என்பதை ஆராய்ந்து அரசு நிச்சயமாக இப்படிப்பட்ட தொழிற் சாலைகளை அமைக்க முன்வரும்.

சேலம், தருமபுரி, மதுரை பகுதிகளில் பழப்பக்குவ அலகுகள் ஆரம்பிப்பதற்கு தேவையான அளவு மூலப்பொருட்கள் ஆண்டு முழுவதும் ஒரே சீரான அளவில் கிடைக்க வாய்ப்பில்லாததால் பழப்பக்குவ அலகு ஆரம்பித்தால் அவை நட்டத்தில்தான் இயங்க வாய்ப்புள்ளதே தவிர லாபகரமாக இயங்க வாய்ப்பில்லை. இதன் காரணமாக அலகுகள் ஆரம்பிப்பதற்குப் பதிலாக தனி நபர்களுக்கு பழப்பக்குவ தொழில் செய்ய தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் நிதியுதவி அளித்து வருகிறது. அத்துடன் சமூக நலவாரியத்தில் பழப்பக்குவ தொழில் ஆரம்பிக்கத் தேவையான மூலதனம் வழங்கி பழப்பக்குவ அலகு ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் இத்தொழிலை தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் நடத்திட வாய்ப்பில்லை.

மத்திய சமூக நல வாரியம் மூலம் தொழில் வளர்ச்சிக்காக தொண்டு நிறுவனங்களுக்கு மூலதனம் வழங்கி வருகிறது. இவ்வாறு மூலதனம் வழங்கப்பட்டு வரும் தொழில்களில் ஒன்றான பழப்பக்குவப்படுத்தும் அலகு செங்கை அண்ணா மாவட்டத்தில் பெருங்களத்தூரில் உள்ள ஸ்ரீவித்யா மாதர் சங்கம் என்ற தொண்டு நிறுவனம் நடத்தி வருகிறது. இத் தொழிலுக்கு 1983—84 -ஆம் ஆண்டில் மத்திய சமூக நல வாரியம் ரூ. 23,380 வழங்கியுள்ளது. சமூக நல வாரியம் தனிநபர் எவருக்கும் பழப்பக்குவப் படுத்தும் தொழில் அலகு ஆரம்பிக்க உதவித் தொகை வழங்கவில்லை.

(கை. கை. து. (ம) கதர் துறையின் அ.சா.கு. எண். 24781/பி.2/89-13, நாள்: 1—4—1991.)

(1) (2) (3) (4)

54 345/89 உடுக்குறியிட்ட வினா எண். 3122 துணை வினா திரு. கோ. வீரையன், எம். எல். ஏ., 31—10—1989 தக்காளி பதனிடும் அல்லது சாறு பிழியும் தொழிற்சாலை அமைப்பது குறித்து..

(5)	(6)
மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மீண்டும் அது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.	தக்காளி பதனிடும் அல்லது சாறு பிழியும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு தேவையான அளவு மூலப்பொருட்கள் ஆண்டு முழுவதும் ஒரே சீரான அளவில் கிடைக்க வாய்ப்பில்லாததாலும் பழப்பக்குவ அலகு ஆரம்பித்தால் அவை நட்டத்தில் தான் இயங்கவாய்ப்புள்ளதே தவிர லாபகரமாக இயங்கவாய்ப்பில்லை.

இதனாலேயே வாரியம் அலகுகள் ஆரம்பிப்பதற்கு பதிலாக தனி நபர்களுக்கு பழப்பக்குவ தொழில் செய்ய நிதியுதவி அளித்து வருகிறது. அத்துடன் சமூக நல வாரியத்தில் பழப்பக்குவ தொழில் ஆரம்பிக்க தேவையான மூதலனம் வழங்கி பழப்பக்குவ அலகு ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுவதால் இத்தொழிலை வாரியம் அலகுகள் ஏற்படுத்தி நடத்திட வாய்ப்பில்லை.

மத்திய சமூக நல வாரியம், மாநில சமூக நல வாரியம் மூலம் தொழில் வளர்ச்சிக்காக தொண்டு நிறுவனங்களுக்கு மூலதனம் வழங்கப்பட்டு வரும் தொழில்களில் ஒன்றான பழப்பக்குவப் படுத்தும் அலகு செங்கை அண்ணா மாவட்டத்தில் பெருங்களத்தூரில் உள்ள ஸ்ரீவித்யா மாதர் சங்கம் என்ற தொண்டு நிறுவனம் நடத்தி வருகிறது. இத்தொழிலுக்கு 1983–84-ஆம் ஆண்டில் மத்திய சமூக நல வாரியம் ரூ. 23.380 வழங்கியுள்ளது சமூகநல வாரியம் தனி நபர் எவருக்கும் பழப்பக்குவப்படுத்தும் தொழில் அலகு ஆரம்பிக்கப் உதவித் தொகை வழங்கவில்லை.

[கை, கை, து. (ம) கதர் துறையின் அ. சா. கு. எண். 24780/பி-2/89–1, நாள் 1—4—1991.]

(1)	(2)	(3)	(4)	(5)
55	262/90	மானியக் கோரிக்கை எண். 26, கைத்தறியும் துணித் தொழிலும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் பதிலுரை 6—4—1990	மாண்புமிகு திரு. ச. தங்கவேலு, நூலை, எனியில் கமாடிட்டிஸ் ஆக்ட் என்ற அத்தியாவியை பொருட்களுள் நிலைக்கு கொண்டு வந்தால், நிச்சயமாக நூல் விலையைக் குறைக்க முடியும் என்று மத்திய அரசுக்கு இந்த கருத்தை மீண்டும் வலியுறுத்தி நூல் விலையை குறைக்க உரிய நடவடிக்கை இந்த அரசு எடுக்கும்.	1988-ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட சிட்டநூல் விலை உயர்வினால், நூலின் விலையை வெளிச்சந்தை விலையில் கட்டுப்படுத்தும் முகமாக, நூற்பாலை, நூல் இருப்பு மற்றும் கொள்முதல் போன்றவற்றினை அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தில் கீழ் கொண்டு வந்து, நூல் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தலாம் என மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசிடம் இது குறித்து தொடர்ந்து பல நினைவூட்டுகள் அனுப்பப்பட்டும், இது தொடர்பாக பதில் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.

மத்திய அரசின் துணி நூல் அமைச்சர் தனது 30—4—1990 தேதியிட்ட நேர்முகக் கடிதத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு, நியாயமான குறைந்த விலையில் நூல் விநியோகம் செய்ய ஒரு புதிய கொள்கையை உருவாக்க நூல் விநியோகம், நூலின் விலையை ஸ்திரப் படுத்துதல் நூலுக்கு மானியம் அளித்தல் போன்ற பல நேர்வுகள் குறித்து, மத்திய அமைச் சகத்தாலும், சிட்ட கமிஷனாலும், விவாதிக்கப்பட்டது என்றும், ஆயினும், நிர்வாகம் மற்றும் நடைமுறையில் ஏற்படக் கூடிய சிரமங்களை முன்னிட்டும் இதனால் ஏற்படக்கூடிய பெரும் மானியத் தொகை செலவினத்தைக் கருத்தில் கொண்டும், நூலினை சட்ட வரம்பிற்குட்படுத்த, விநியோக மற்றும் மானியம் வழங்குவதில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. எனவே, இதனை மேற்கொள்ள முடியவில்லை எனத் தெரிவித்தார் திருந்தார். நாட்டிலுள்ள தனியார் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகள், சிட்டநூல் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையில் தங்களுக்குள்ள பொறுப்பினை, உணர்ந்து செயலாற்றும் வகையில், நூல் விலை உயர்வு பிரச்சினையைக் கட்டுப்படுத்தி நெசவாளர் களை உய்விக்கலாமெனக் கருதி, 20—4—1990-ஆம் நாளன்று, நாட்டிலுள்ள முன்னோடி தனியார் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகள் பிரதிநிதிகளுடன், கலந்து பேசி, மேற்படி பிரதிநிதிகளே மனமுவந்து ஐந்து விழுக்காடு தள்ளுபடி விலையில், சிட்டநூலினை, கைத்தறி நெசவாளர்களுக்கு, 31—12—1990 வரை விநியோகிக்க முன்வந்த தினைத் தொடர்ந்து, தற்பொழுது, தனியார் மற்றும் கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு '' சிட்ட நூல் '' சலுகை விலையில் கிடைத்து வருகிறது. மேலும், அனைத்து நூற்பாலைகளும், 50 விழுக்காடு சிட்ட நூலினை உற்பத்தி செய்ய வேண்டும் என மத்திய அரசு துணி நூல் ஆணையரின் அறிக்கை மூலம் வலியுறுத்தப் பட்டதினால் சிட்ட நூல் விநியோகத்தில் தற்பொழுது, எவ்விதமான தட்டுபாடும் இல்லை.

(கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர் துறை அ. சா. கு. எண். 12185/இ-1/90-3, நாள் 17—12—19990).

(1)	(2)	(3)	(4)
56	269/90	மானியக் கோரிக்கை எண். 26, கைத்தறியும், துணித் தொழிலும் திரு. அ. லெ. சுப்பிரமணியன், எம். எல். ஏ., 6—4—1990.	திருநெல்வேலி பேட்டையிலுள்ள கூட்டுறவு நூல்களை முன்னுரிமை கொடுத்து திருநெல்வேலி பாளையங்கோட்டையிலுள்ள நை தறியாளர்களுக்கு, முன்னுரிமை கொடுத்து விற்கப்படும என்பது குறித்து.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. ச. தங்கவேலு, உறுப்பினருடைய கருத்துக்களை மனதில் கொண்டு உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ளப்படும்.	பேட்டை, திருநெல்வேலி கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி யாகும், நூலினை மேற்படி பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு, அந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் தேவைப்படி, விநியோகிக்க ஆவன செய்யுமாறு, கோ-ஆப் டெக்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

(அ. சா. கு. எண். 12053/இ-1/90-3, நாள் 17—12—19990).

(1)	(2)	(3)	(4)	(5)
57	263/90	மானியக் கோரிக்கை எண். 26 கைத் தறியும் துணித் தொழிலும் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சரின் பதிலுரை 6-4-1990.	மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : காமராஜர் மாவட்டம் ராஜ பாளையத்தில் மட்டும் மருத்துவத் துணியை உற்பத்தி செய்கின்ற அந்தச் சங்கத்திலுள்ள நெசவாளர் களுடைய சிறப்புத் தன்மையைக் கருதி அவர்களுக்கு 15 சதவித கூலி உயர்வு வழங்கப்படும்.	16—4—1990 முதல் ராஜபாளையம் உள்ளிட்ட விருதுநகர் சரகத்தில் செயல்படும் மருத்துவத் துணி ரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப் பினர்களுக்கு அத்தேதியில் வழங்கப் பட்டு வந்த கூலியிலிருந்து 15 சத விகிதம் உயர்த்தி வழங்க கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர், துறை : அ. சா. கு. எண். 15744/டி.2/90-2, நாள் 19—10—1990).

(1)	(2)	(3)	(4)	(5)
58	265/90	மானியக் கோரிக்கை எண். 26 கைத் தறியும் துணித் தொழிலும் மாண்பு மிகு கைத்தறித் துறை அமைச்சரின் பதிலுரை 6— 4—1990.	மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பெரியார் மாவட்டத்தில் சென்னி லைப் பகுதியில் ரு. 19 லட்சம் செலவில் ஒரு நூல் டப்ளிங் யூனிட் என்று சொல்லத்தக்க அளவில், 2-க்கு 17 ரக நூலை உற்பத்தி செய்கிற அந்த நிறுவனம் நிர்மாணிக்கப்படும்.	அரசு ஆணை (நிலை) எண். 223, கைத்தறி, கைவினைப் பொருட்கள் மற்றும் துணிநூல், கதர் துறை, நாள் 3—7—1990-ல் பெரியார் மாவட்டம், சென்னி மலையில், 1990-91-ஆம் ஆண்டில் ரு. 19.00 லட்சம் செலவில் நூல் முறுக்கும் நிறுவனம் அமைப்பதற்கு ஆணை யிடப்பட்டுள்ளது.

(கைத்தறி கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறை : அ. சா. கு. எண். 12165/டி.1/90-2, நாள் 29—10—1990).

(1)	(2)	(3)	(4)
59	517/90	உடுக்குறியிட்ட வினா எண். 1535, நூலை வினா திரு. எஸ். எஸ். கருப்பசாமி, எம். எல். ஏ., 22—8—1990.	கைத்தறி விற்பனைக்கு மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு 20 விழுக்காடு கழிவுத் தொகை வழங்கி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்க அரசு ஆவண செய்யுமா என்பது குறித்து.

உறுதி மொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : இந்தத் தள்ளு படி. பண்டிகை காலங்களில் மட்டுமல்லாமல் மாதந்தோறும் 1 முதல் 5 நாட்கள் வழங்குவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(6)

நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புக் கிடைக்க ஏது வாக 1990-91-ம் நிதி யாண்டிலிருந்து கைத்தறி துணிகளின் விற்பனை மீது சிறப்புத் தள்ளுபடி ஒரு ஆண்டில் 90 நாட்கள் வழங்கலாம் என இருந்ததை 100 நாட்களாக உயர்த்தி, 20 சத விகிதம் தள்ளுபடியை மேற்கண்டவாறு வழங்கலாம் என அரசு

ஆணை (நிலை) எண் 339, கைத்தறி, கைவினைப் பொருட்கள் துணி நூல் மற்றும் கதர் துறை நாள் 3—12—1990-ல் ஆணையிடப்பட்டுள்ளது :—

கைத்தறி வார விழா	..	15 நாட்கள்
பெரியார் அண்ணா பிறந்த நாட்கள்	..	10 நாட்கள்
தீபாவளி	..	25 நாட்கள்
பொங்கல்	..	10 நாட்கள்
ஒவ்வொரு மாதமும் 6-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை மாதம் 5 நாட்கள், 8 மாதத்திற்கு	..	40 நாட்கள்
	மொத்தம்	100 நாட்கள்

இப்புதிய ஆணையின்படி பண்டிகை இல்லாத பிற 8 மாதங்களில் ஒவ்வொரு மாதமும், 6-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை சிறப்பு தள்ளுபடி கிடைக்கும்.

(அ. சா. கு. எண் 18364/டி2/90-3, நாள் 7—3—1991).

சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை.

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
60	295/85	உடுக்குறியிட்ட வினா 44 துணை வினா திரு. கு. ரமணி, எம். எல். ஏ., 27—6—1985.	*** இன்றுள்ள நிலையில் இந்த 75 ரூபாயைக் கொண்டு குறைந்த பட்சம் ஒரு குடும்பத்தில் உள்ள ஒரு கண் தெரியாத பெண்ணாவது உணவு உண்டு வாழ்வதற்கு சாத்தியப்படாத நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு (கண் தெரியாத ஏழைப் பெண்களுக்காக சென்னை சாந்தோமில் நடைபெறும் விடுதி கொடுக்கக் கூடிய அந்த உதவித் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

உறுதி மொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு இருமதி கோமதி சீனிவாசன் :—** நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அரசு பரிசிலித்து முடிவுக்கு வரும்.	சென்னை சாந்தோமிலிருந்த (தற்பொழுது பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோர் அரசு மாணவர் உயர் நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள) பார்வையற்ற பெண்கள் தங்கி பயிற்சி பெறும் மறுவாழ்வு இல்லத்திலுள்ள பார்வையற்ற பெண்களுக்கு அவர்கள் பயிற்சி பெறும் காலத்தில் அளிக்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 50-லிருந்து ரூபாய் 90-ஆக அதிகரிக்கப்பட்டு அரசு ஆணை நிலை எண் 990, சமூக நலம் நாள் 23—6—1987-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(அ.சா. கு. எண் 100221/ச. ந. 4/88-3, நாள் 6—1—1990)

(1)	(2)	(3)	(4)
61	448/85	உடுக்குறியிட்ட வினா 185, துணை வினா திரு. சைதை சா. துரைசாமி, எம். எல். ஏ., 18-7-1985.	முதியோர் உதவித் தொகை பெற வருவாய்த்துறை அலுவலகத்தில் மனு செய்கின்ற பொழுது பின்னால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும் நாம் கிராம நிர்வாக அதிகாரிகளை அனைத்துப் பகுதியிலும் நியமித்து இருக்கிறோம். அவர்களின் வாயிலாக வருகின்ற விண்ணப்பங்களை, சமூக நலத்துறை பரிசீலனை செய்ய ஒரு மாற்று ஏற்பாட்டை செய்வார்களா ? சென்னை மாவட்டத்தில் எல்லா பகுதிகளிலும் மூன்று மாத கால மாக முதியோர் உதவித் தொகை யாருக்கும் கிடைக்க வில்லை. அது கிடைக்க அமைச்சர் ஆவன செய்வார்களா ?
	(5)	(6)	
	மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அரசு பரிசீலித்து அவர்கள் எல்லோருக்கும் முதியோர் உதவித் தொகை கொடுக்கப்படும்.	குழுவின் குறிப்புரை : 24—8—1987 சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடம் இது குறித்து மேல் விவரங்கள் பெறப்பட்டு விட்டனவா ? அக்கோப்பில் என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து அறிவுரைகள் வழங்குவதற்குப் பதிலாக நிலுவையில் உள்ள மனுக்களில் மூன்று மாத காலத்திற்குள்ளாக மேல் நடவடிக்கை எடுத்து தீர் செய்து உத்தரவுகள் வழங்க அரசு ஆணைகள் வெளியிடுமா என்கின்ற விவரங்கள். மேலும் துறையிடமிருந்து வந்துள்ள பதில் : முதியோர் உதவித் தொகை திட்டத்தை அமுல் படுத்துவதை வருவாய்த் துறையிலிருந்து சமூக நலத்துறைக்கு மாற்றுவது பற்றி சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் சமூக நல இயக்குநர் ஆகியவர்களின் கருத்துரையை பெற்று அரசு பரிசீலனை செய்தது. இத்திட்டத்தை வருவாய்த்துறையிலிருந்து சமூக நல துறைக்கு மாற்றுவதால் ஏற்படக்கூடிய நிர்வாக சிக்கல்களை கருத்தில் கொண்டு தற்போதிருக்கும் நடைமுறையை தொடரலாம் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை பெறுதல் திட்டத்தை செயல்படுத்துவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க கொள்கையளவில் சில மாறுதல்கள் செய்யப்பட்டு ஒவ்வொரு கால ஆண்டு இறுதியிலும் முதியோர் உதவித் தொகை பெற காத்திருப்போர் பட்டியலிலுள்ள தகுதி வாய்ந்தவர்கள் எத்தனை பேர் என்ற விவரத்தை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரை அவ்ப்பும் படியும் அவர் அனுப்பும் விவரங்களின் அடிப்படையில் கூடுதல் இடங்கள் காத்திருப்பவர் எவருமின்றி அனைவருக்கும் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் அனுமதிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. (அரசு ஆணை நிலை எண். 440 பி. ந. ச. உ. தி (ம) ச. ந. துறை, நாள் 8—5—1989). 3. முதியோர் உதவித் தொகை பெறுதல் திட்டத்தை செயல் படுத்துவதில் காலதாமதத்தை தவிர்க்க அரசு 200 இளநிலை உதவியாளர் பதவிகளை உருவாக்கி இத்திட்டத்தை செயல் படுத்த 4—5—1990 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. (அ. ஆ. நிலை எண். 213, நாள் 4—5—1990) சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை (அ. சா. கு. எண். 773/88/ச.ந. 7/87/5, நாள் 5—10—19990.)

(1)	(2)	(3)	(4)
62	447/85	உடுக்குறியிட்ட வினா 185 திரு செ எம். எல். ஏ. 18—7—1985 செம்மலை	முதியோர் உதவித் தொகை சமூக நலத்துறையினுடைய திட்டமாக இருந்தாலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்தும் பொழுது வருவாய்த்துறை அதிகாரிகளிடம்தான் இது ஒப்படைக்கப்படுகிறது வருவாய்த்துறை அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாகவும் வேலைப் பளுவின் காரணமாகவும் இந்தத் திட்டங்கள் தாமதப் பட்டு வருகின்றன எனவே சமூக நலத்துறை அலுவலர்களைக் கொண்டே இந்த தகுதியான நலத்துறை அலுவலர்களைக் முதியர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அந்தப் பணியைச் செய்ய அரசு பரிசீலிக்குமா ?

(5)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அரசு பரிசீலிக்கும்.

(6)

வரிசை எண். 61-ல் உள்ள டதில் டார்க்கவும்.

(1)	(2)	(3)	(4)	(5)
63	198/87	உடுக்குறியிட்ட வினா 11312 துணை வினா திரு. தி. அன்பழகன் ஏம். எல். ஏ., 1—4—1987.	வடாற்காடு மாவட்டப் வாணியம் பாடினியிலிருந்து இராணிப்பேட்டை வரையில் பாலாற்றில் கழிவு நீர் கலப்பதால் தற்போது குடிநீருக்கு பாதிப்பு ஏற்பட்டு அதன் காரணமாக தோல் சம்பந்தமான வியாதிகள் வருகின்றன. இக் குறையைத் தீர்க்க வெளியேற்றப்படுகின்ற நீரைச் சுத்திகரிப்புச் செய்ய அங்குள்ள தொழிற்சாலைகள் முன் வந்துள்ளனவா? இல்லையெனில் அப்படிப் பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை தண்டனை பற்றி.	மாண்புமிகு திரு. ட. உ. சண்முகம் வாணியம்பாடியைப் பொறுத்த வரையில் கூட்டுறவுத் துறையின் மூலம் கழிவு நீரைச் சுத்திகரிப்பு பண்ணுகின்ற ஆலையை அமைக்க முன்வந்து இருக்கிறார்கள் ஆனால், அவர்கள் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அவர்களுக்கு இறுதியாக அரசு கடுமையான நடவடிக்கையை இன்னும் ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள்ளாக நிச்சயமாக எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(6)

29—1—1989 அன்று நடைபெற்ற குழுவின் குறிப்புரை

(1) கழிவு நீர் சுத்திகரிப்பு பணிகளை நிறைவேற்றுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு அறிவித்துள்ளதோடு சுத்திகரிப்பு சாதனங்கள் நிறுவும் வேலை எந்நிலையில் உள்ளது என்பது குறித்து.

(7)

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் வாணியம்பாடியில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீரைச் சுத்தம் செய்யும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முடியும் தருவாயில் உள்ளது. ஆம்பூர், டேரணாம்பட்டு, மற்றும் இராணிப்பேட்டை தோல் பதனிடுவோர் சங்கம் பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவ முன்மொழிவு அனுப்பி யுள்ளது. அந்த முன்மொழிவு தமிழ்நாடு தோல் பதனிடுவோர் சங்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தோல் பதனிடுவோர் சங்கம், தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் உள்ள பம்மல் மற்றும் பல்லாவரம் பகுதிகளில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்று அமைந்துள்ளது. அந்த நிறுமம் முதல் மூலதன

மாக ரூபாய் 30 இலட்சம் வரூல் செய்துள்ளது. இந்திய வங்கி ரூபாய் 1.25 கோடி கடன் வழங்கியுள்ளது. தோல் பதனிடுவோர் சங்கமும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மும் இணைந்து பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஸ்திரைவில் அமைக்க முயற்சிகள் மேற்கொளளபட்டு வருகின்றன.

(அ. சா. கு. எண். 42804/சு.1/89-5, நாள். 9—8—1990.)

(2) 12—9—1990 நாளன்று நடைபெற்ற குழுவின் குறிப்புரை.— '' வடாற்காடு—அம்பேத் கார் மாவட்டம் வாணியம்பாடியிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட துவங்கிவிட்டதா?

வாணியம்பாடியில் அமைந்த தோல் பதனிடும் தொழிற்சாலை லிருந்து வெளிவரும் கழிவு நீரைச் சுத்திகரிக்க வாணியம்பாடி யில் அமைந்துள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் டணி முடியும் தருவாயிலுள்ளது. மேலும் இது 8—5—1991 அன்று சோதனை ஓட்டம் துவக்கத்துடன் இயங்கி வருகிறது.

(அ. சா. கு. எண். 42804/சு. 1?95-12, நாள். 26—8—1991.)

அனுப்புனர்,
திரு. பி.எம். பெல்லியப்பா, இ.ஆ.ப.,
தலைவர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
32, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை-600 004.

பெறுநர்,
அரசு செயலர்,
சுற்றுப்புற சுழல் மற்றும் வனத்துறை
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009.

கடித எண் டி.எஸ். 3/6205/உறுதிப்பாடு 90-1, நாள் 15-11-1991.

ஐயா,

பொருள் : சுற்றுப்புறச்சூழல் நலக் கட்டுப்பாடு—அரசு நிர்மான குழு—உறுதிப்பாடு எண். 198/87—தற்போதைய மேம்பாட்டு நிலை—மேற்கொண்டு விளக்கம் குறித்து.

பார்வை : நேர்முகக் கடித எண் 42804/இசி1/89-13, நாள் 8-11-1991 தலை அரசு செயலர், சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை சென்னையிலிருந்து.

மேற்கண்ட அரசு நேர்முகக் கடிதம் குறித்து நான் மேற்கண்டவாறு பதிலை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. அரசு உறுதிப்பாடு எண் 198/87—வாணியம்பாடியில் அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரை சுத்திகரிக்க, வாணியம்பாடியில் அமைந்துள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு பணி முடியும் தரு வாயிலிலுள்ளது. மேலும் இது 8-5-1991 அன்று சோதனை ஓட்டம் துவக்கத்துடன் இயங்கி வருகிறது.

ராணிப்பேட்டையில் அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரை சுத்திகரிக்க ராணிப்பேட்டையில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவுவதற்கு தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகம் நிலம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 69 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பயனடைகின்றன. தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவுவதற்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டுள்ள.. இந்த திட்டம் செப்டம்பர் 1992-க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றும் ராணிப்பேட்டை-சிட்கோ தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்காலைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரை சுத்திகரிக்க பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிறுவும் திட்டம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்துணையுடன் நிறுவப்பட உள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 66 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பயனடைகின்றன. இத்திட்டத்தின் அமைப்பு சுமார் ரூ. 275 லட்சம் ஆகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான திட்ட செயல் வறிக்கையையும், பொது சுத்திகரிப்பு ஆலை நிறுவுவதற்கான இடத்தையும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு நிதி உதவி பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலத்திற்கான முத்திரைத் தீர்வு விளக்களிப்பு பெறுவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

சத அரசு, 15-11-91
தலைவருக்காக.

(1)	(3)	(3)	(4)
64	197/90	உடுக்குறியிட்ட வினா எண் 5077, திரு. க. குருநாதன், எம்.எல்.ஏ.	பாளையங்கோட்டை ஒன்றியத்திலே இருக்கிற தளவாய்புரத்திற்கு பறவைகள் வருவதால் அங்கு பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு முன் வருமா என்பது குறித்து.

(5)

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : இங்கே மட்டுமல்ல, அருகில் இருக்கக்கூடிய முதலிக்கல்பட்டி பக்கத்திலே கூட பறவைகள் அதிகமாக வருவதால் இந்தப் பகுதியில் ஒரு பறவைகள் சரணாலயம் அமைக்க நாம் வழிவகைகளைக் காணலாம்.

(6)

தளவாய்புரம் மற்றும் முதலைக்கல்பட்டி ஆகிய இடங்களில் பருவமழை காலங்களில் பறவைகள் வருவதால் அவைகளைப் பாதுகாக்க சரணாலயமாக அமைக்கலாம் என்ற உறுதிமொழிப்படி திருநெல்வேலி புலிகள் காப்பகத்தின் கள இயக்குநரால் இப் பகுதிகள் தணிக்கை செய்யப்பட்டன. தளவாய்புரம் மற்றும் முதலைக்கல்பட்டியில் உள்ள குளங்களில் சனவரி முதல் ஜூன்/ஜூலை வரையிலான காலத்தில் தண்ணீர் அதிகமாக இருக்கும்போது மட்டுமே பறவைகள் அதிகமாக வருகின்றன. மேலும் இங்கு வரும் பறவைகள் பெரும்பாலும் உள்ளூர் வகை இனங்களாக இருக்கின்றன. எனவே இப்பகுதிகளில் பறவைகள் சரணாலயம் அமையக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை எனலாம்.

(சுற்றுப்புறம்-வனத்துறை அ.சா.கு. எண் 28572/வன-5/1905, நாள் 15-2-1991.)

2 & 1960 அன்று நடைபெற்ற சட்டப் பேரவை கூட்டத்தின் நடவடிக்கைகளுக் குறிப்புகளில் தெரிந்தெடுக்கப்பட்ட உறுதி மொழி.

(1)	(2)	(3)	(4)
65	215/90	உடுக்குறியிட்ட வினா எண். 3717, தனை வினா திரு. திரா. மாலைமணி, எம்.எல்.ஏ., 2-4-1990.	தமிழகத்திலே பல்வேறு பகுதிகளில் காட்டிலாக்காவுக்கும் சொந்த மான புறம்போக்கு நிலங்களில் குடியமர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு பட்டா வழங்குவது.

(5)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அதைப் பற்றி பரிசிலிக்கலாம்.

(6)

வனநிலத்தை வனமற்ற காரியங்களுக்கு ஒதுக்கீடு செய்ய மத்திய அரசின் வனச் சட்டம் 1980 தடைசெய்கிறது. வன புறம்போக்கு நிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு பட்டா வழங்குவது குறித்து பிரேரணை ஏதும் நிலுவையில் இல்லை.

(சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, அ.சா.கு. எண் 36370/வனம் 10 (1)/90-5, நாள் 7-2-1991.)

(1)	(2)	(3)	(4)
66	347/90	உடுக்குறியிடாத வினா எண் 5484, திரு. வே. பெரியசாமி, எம்.எல்.ஏ., நாள். 17-4-1990.	பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியிலுள்ள தாமரைக்கரை முதல் செங்குளம் வரை வன இலாகாவைச் சேர்ந்த சாலையை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : 1990-91 ஆம் ஆண்டு பணி ஆரம்பிக்கப்படும்.	பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் தாமரைக்கரை முதல் செங்குளம் வரை உள்ள சாலையின் மொத்த நீளம் 23 கி.மீ. முதல் கட்டமாக 3 கி.மீ. தூரத்திற்கு 1990-91 ஆம் நிதியாண்டில், மேம்படுத்தப்படும். அதற்கான அரசாணை எண் 358, கற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 11-6-1990-ல் ரூ. 8 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி ஆரம்பிக்க முன்னோடி வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி சாலையின் நீளம் 9 கி.மீ. ஆனதால் ஒவ்வொரு நிதியாண்டும் சுமார் 3 கி.மீ. முதல் 4 கி.மீ. தூரம் வரை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். (அ.சா.கு. எண் 46098/வனம்-11/90-3, நாள். 20-11-1990.)
(1)	(2)	(3)	(4)
67	478/90	கவன ஈர்ப்பு திரு. கே. ரவி அருணன், எம்.எல்.ஏ., 11-5-1990.	நெல்லை மாவட்டம் முண்டந்துறை சரணாலயப் பகுதியில் காலி குடியிருப்பில் பல வருடங்களாக சாகுபடி செய்து வந்த ஆதிவாசிகளின் நிலத்திலுள்ள பயிர்களையும் வீடுகளையும் அழித்து அவர்களை வனத் துறையினர் வெளியேற்ற முயலுவதால் அப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது குறித்து.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : அப்படி ஆபத்தில்லா இடத்திற்கு குடி பெயர்ந்து செல்ல விரும்புகிற அளவிற்கு ஏற்பாடுகளை செய்து போதிய நிலங்களையும் கொடுப்பதற்கு மத்திய அரசின் பெற்று நடவடிக்கை அனுமதி எடுக்கப்படும்.	களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக பகுதியில் பல்லாண்டு களாக வாழ்ந்து வந்த 53 ஆதிவாசி குடும்பங்களின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு 1990-91 நிதி ஒதுக்கீட்டில் ரூ. 16,93,000 கிழ்க் கண்ட வேலைகளுக்காக அனுமதித்துள்ளது. (ரூபாய் இலட்சத்தில்) 1. ரூ. 20,000 வீதம் 53 குடும்பங்களுக்கு நில மேம்பாட்டிற்காக 10.60 2. ரூ. 10,000 வீதம் கட்டிடப் பொருட்கள் வழங்கல் 5.30 3. ரூ. 1,000 வீதம் வீட்டு சாமான்களை மறு இடத்திற்கு கொண்டு செல்ல 0.53 4. குடிநீர் வசதிக்கு 0.50 மொத்த .. 16.93

இப்பணிகளை மேற்கொள்ளும்படி அரசு விரைவில் ஆணை வெளியிடவுள்ளது.

(அ.சா.கு. எண் 57414/வன-5/90-1, நாள் : 26-12-1990).

(1)	(2)	(3)	(4)
6	69/84	1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை 8-8-1984.	

(4)	(5)
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாமல்லபுரத்தில் திறந்த வெளி அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கவும், முட்டுக்காட்டில் நிலையான படகுத் துறை ஒன்றைக் கட்டுவது குறித்தும் பரிசிலிக்கப்பட்டு வருகின்றது.	குழுவின் குறிப்புரை : 14-7-1990 முட்டுக்காட்டில் நிலையான படகுத் துறை ஏன் அமைக்கப்படவில்லை? மாமல்லபுரத்தில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட எப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்படும்? காலதாமதம் ஏன்?

மேலும் துறையிடமிருந்து வந்துள்ள பதில் :

திருவான்மியூரிலிருந்து மாமல்லபுரம் வரையில் பக்கிங்காம் கால்வாய்க்கு இணைகில் எந்தவிதமான மேம்பாட்டு பணிகளும் செய்யக்கூடாது என அரசு தடை விதித்துள்ளது. இந்த தடை நீக்கப்பட்டால் தான் முட்டுக்காட்டில் நிலையான படகுத்துறை கட்ட முடியும். மாமல்லபுரத்தில் அருங்காட்சியகம் அமைக்க முதலில் தேர்ந் தெடுக்கப்பட்ட இடம் இந்திய தொல்பொருள் துறையின் தடை செய்யப்பட்ட இடத்தில் வருவதால் வேறு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாமல்ல புரத்தில் 'திறந்தவெளி அருங்காட்சியகம், அமைக்கும் திட்டத்தை இதுவரை ஒதுக்கப்பட்ட ரூ. 27.09 இலட்சம் செலவிலேயே நிறைவேற்றி முடிக்கலாம். என அரசு முடிவு செய்தது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ. 27.09 இலட்சம் செலவிற்குள் திட்டத்தினை நிறைவேற்றி முடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண் 16051/க1/90, நாள் : 11-1-1991.)

(1)	(2)	(3)	(4)
69	318/85	உறுக்குறியிட்ட வினா எண் 1235, திரு. நாதன், எம்.எல்.ஏ., நாள் 2-7-1985.	கொடைக்கானல் ஏரியை மேலும் அழகுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

(5)	(6)
மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன், 1 ஆம் அரசின் பரிசீலனையில் உள்ளது.	அரசின் நிதி நிலை பற்றாக் குறையானும், மேலும் மேற்கு மலைத் தொடர் வளர்ச்சிப் பணிகள் மூலம் நிறை வேற்றும் திட்டங்களுக்காக ஐந்தாண்டுத் திட்டம் (1990-95) ல் நிதியுதுக்கப்படாதாலும் இத்திட்டம் குறித்து அரசு செயல்படுத்த இயல வில்லை எனத் தெரிவித்துக் கொள்ளலாம்.

53-396—10

(1) (2) (3) (4)

70 512/86 உடுக்குறியிட்ட வினா எண். 4133, திரு. டாக்டர் ந. முகமது சலிம், எம்.எல்.ஏ., 27-3-1986. கொடைக்கானலில் சுற்றுலா பயணிகள் தங்க கூடுதல் விடுதிகள் கட்டும் திட்டம் ஏதும் உள்ளதா ?

(5) (6)

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : அதிகமான தங்கும் அறைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஒன்று நடவடிக்கையில் உள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது இங்கு இருக்கும் உணவு விடுதியை விரிவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(7) (8)

இவ்வறுதிமொழி குறித்த விரிவாக்க நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

1. கொடைக்கானலில் உள்ள தமிழ்நாடு ஓட்டலில் உணவு விடுதியை விரிவாக்குவதற்கு ரூ. 35,000 மதிப்பீட்டில் கூடுதலாக 60 நபர்கள் ஒரே நேரத்தில் உணவருந்திச் செல்லும் வசதி செய்துதர ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் முடிவடைந்துள்ளன. இதனால் தற்போது 100 நபர்கள் ஒரே நேரத்தில் உணவருந்தும் வசதியைப் பெற்றுள்ளது.

2. மேலும் 93 படுக்கை வசதியைக் கொண்ட இளைஞர் விடுதி தற்போது 216 படுக்கை வசதி கொண்ட அறையாக விரிவாக்கப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 23013/சு1/89-8, நாள் 7-12-1990.)

(1) (2) (3) (4)

71 346/86 உடுக்குறியிடாத வினா எண். 5591, திரு.மு. இராமநாதன், எம்.எல்.ஏ., 25-4-1986. தஞ்சையில் சுற்றுலாத் துறை மூலம் இளைஞர் விடுதி கட்ட செயற் குறிப்பு உள்ளதா என்பது குறித்து.

(5) (6)

மாண்புமிகு இராம. வீரப்பன் : அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தஞ்சையில் எடுக்கப்பட்ட பயணியர் விடுதியை இளைஞர் விடுதியாக மாற்றும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(7) (8)

கருத்துருவின் தற்போதைய நிலை என்ன? இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தஞ்சாவூரில் எடுக்கப்பட்ட 'பயணியர் விடுதி' தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் 'ஹோட்டல் தமிழ்நாடு' ஆக நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஹோட்டலை இளைஞர் விடுதியாக மாற்றி அமைக்க பரிசீலனை செய்யப்பட்டது. இதனை ஹோட்டலாக தொடர்ந்து நடத்தினால் இலாபகரமாக இருக்கும் என்றும் இளைஞர் விடுதியாக மாற்றும் திட்டம் ஏதும் தேவையில்லை என இத்துறை கருதுகிறது.

(அ.சா.கு., எண் 11813/சு1/90-3, நாள் 21-1-1991).

(1)	(2)	(3)	( )
72	43/87	உடுக்குறியிட்ட வினா எண் 9356 துணை வினா திரு. சோ. கலிதீர்த்தன், எம் எல்.ஏ., 21–3–1981.	தென்னாற்காடுமாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியினை சுற்றுலா மையமாக மாற்றுவது குறித்து.

(5)	(6)
அதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.	மாவட்ட உலாத்தலத் திட்டத்தின்கீழ் தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் மலையில் ஓர் இளைஞர் விடுதி கட்டுவதற்கு அரசு ரூ. 6 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

(7)	(8)
இளைஞர் விடுதி எந்த எந்த உபயோகத்திற்கு பயன் படுத்தப்படுகிறது? இது சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டுள்ளதா? இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?	அரசு நிலைக் குறிப்பு எண். 81, செய்தி மற்றும் சுற்றுலாத் (சு. 4) துறை, நாள் 23–2–1990-ல் தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலை மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கல்ராயன் மலைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதி அளிக்கும் பொருட்டு ரூ. 6 இலட்சம் செலவில் இங்கு இளைஞர் விடுதி கட்டப்பட்டு வருகிறது. இந்த இளைஞர் விடுதி சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும் உணவு அருந்துவதற்கும் பயன்படுத்தப்படும். (அ.சா.கு. எண். 13583/சு. 4/90-1, நாள் 28–11–1990).

(1)	(2)	(3)	(4)
73	91/87	உடுக்குறியிட்ட வினா எண். 11837, திரு. டி. ஆர். வேங்கடரமணன், எம்.எல்.ஏ., 23–3–1987.	சென்னையில் வெளிநாட்டு இந்தியர் மூலம் ஓட்டல் கட்டும் திட்டம் உள்ளதா? ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(5)	(6)
மாண்புமிகு வி.வி.சுவாமிநாதன்: தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் முதலீட்டுடன் அவர்கள் பங்கேற்கும் கூட்டுத் திட்டங்களாக சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள இடத்திலும் வேப்பேரியில் கண்ணப்பர் திடலை ஒட்டியுள்ள இடத்திலும் நட்சத்திர ஓட்டல்கள் கட்ட திட்டமிட்டிருக்கிறது.	வெளிநாட்டில் வாழும் இந்தியர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் கூட்டாகச் சேர்ந்த சர்வதேச சுற்றுலா மையம் ஒன்று சுமார் ரூ. 25 இலட்சம் செலவில் வள்ளுவர் கோட்டம் அருகில் அமைக்கலாம் என கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இத்திட்டம் சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டதால் கைவிடப்பட்டது. வேப்பேரியில் கண்ணப்பர் திடல் மற்றும் அதனையொட்டி முன்பு மிருகக்காட்சி சாலை இருந்த இடமும் சேர்த்து அந்த இடத்தில் ஐந்து நட்சத்திர ஓட்டல் மற்றும் பொழுது போக்கு வளாகம் ஒன்று அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சேர்ந்து ஏற்படுத்தும் கூட்டு திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அந்த இடமும் இறந்தவெளி பொழுதுபோக்கு இடமாக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அறிவித்திருந்தது தெரியவந்தது. மேலும் அந்த இடத்தின் மதிப்பும் மிகக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. எனவே இந்த திட்டமும் கைவிடப்பட்டது.

(1)	(2)	(3)	(4)
74	9/90	உடுக்குறியிட்ட வினா எண். 3330, துணை வினா திரு. ந. சௌந்திரபாண்டியன், எம்.எல்.ஏ., நாள் 19–1–1990.	மதுரையிலுள்ள வண்டியூர் கண்மாயில் சிறுவர்களுக்கான இரயில் ஓடும் தூரத்தை விரிவு படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்த நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி, உறுப்பினருடைய கருத்தை ஏற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	மாநில பகுதி II திட்டத்தின் கீழ் மதுரையிலுள்ள வண்டியூர் கண்மாயில் சிறுவர்களுக்கான இரயில் ஓடும் பாதையை நீளப் படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் அரசின் நிதிநிலை பற்றாக்குறை காரணமாக தற்போது இத்திட்டத்தை ஏற்கத் தேவையில்லை என இத்துறை கருதுகிறது.
			(அ.சா.கு. எண். 19193/சு. 1/90-1, நாள் 5–2–1991).
(1)	(2)	(3)	(4)
75	50/90	உடுக்குறியிட்ட வினா எண். 2640, திரு சம்சுதீன் என்கிற கதிரவன், எம்.எல்.ஏ., 23–1–1990.	திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டப் குற்றாலம் நகரியத்திற்கு சொந்தமான "அருவி இல்லை" விடுதியைச் சுற்றுலாத் துறைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை குறித்து.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி, கருத்துரு பரிசீலனையில் உள்ளது.	குற்றாலம் நகரியக்குழு 6–12–1986-க்குப்பின் செயல்படவில்லை நகரியத்திற்குட் டாத்தியப்பட்ட அலுவலர் சொத்துக்களை மாற்றம் செய்வதற்கு நகராட்சியின் கையேடு விதி 12 (3)-ன்படி நகரியக்குழுவின் அனுமதியும், அரசின் அனுமதியும் பெற வேண்டும். குற்றாலம் நகரியக் குழு தற்போது செயல்படாததால் நகரியக் குழுவின் ஒப்புதல் பெற இயலாத நிலையில் உள்ளது. குற்றாலம் நகரியத்திற்குச் சொந்தமான அருவி இல்லத்தை தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு மாற்றுவது சம்பந்தமாக நகரியக்குழு அமைத்த பின்புதான் நடவடிக்கை எடுக்க இயலும்.
			(அ.சா.கு. எண். 3399/சு. 1/90-1, நாள் 7–12–1990).
(1)	(2)	(3)	(4)
76	69/90	உடுக்குறியிட்ட வினா எண். 414, துணை வினா திரு. செ. நூர்முகமது, எம்.எல்.ஏ., 27–1–1990.	டத்மதாபுரத்தில் ஒரு பழங்கால கோட்டை இருக்கிறது. சுற்றுலா பயணிகளை கவர்கின்ற முறையில் அங்கே வசதிகள் செய்து தரப்படுமா என்பது குறித்து.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி, அங்கே ஒரு சைட் அமெனிட்டீஸ் என்ற அந்த திட்டத்தின் கீழே ஒரு கட்டிடம் கட்டலாம் என்று ஒரு திட்டம் இருக்கிறது.	தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மத்திய அரசு உதவி திட்டத்தின்கீழ் ஏற்கனவே பல சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களிலும் அதி முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்த

திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. துறை தயாரித்த 1991–92 ஆம் ஆண்டு மத்திய அரசு நிதி உதவி பெறும் திட்டங்களின்கீழ் பத்மநாபபுரம் கோட்டையை சுற்றுலாத்தலமாக்கி வழித்தட வசதிகள் ஏற்படுத்தும் திட்டம் இடம் பெறவில்லை. நிதி நிலைமை காரணமாக தற்சமயம் மேற்படி திட்டம் அரசினால் கைவிடப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 15481/சு. 4/90-1, நாள் 10–1–1991).

77	372/90	உடுக்குறியிட்ட வினா எண். 2357, துணை வினா திரு. இரா. இராசமாணிக்கம், எம்.எல்.ஏ., நாள் 20–4–1990.	கும்பகோணம் பிறந்த தேரமுந்தூரை, சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.

(5) (6)

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : ஏராளமான பயணிகள் அங்கு வருகின்ற காரணத்தால் சுற்றுலாத் துறையின் மூலமாக 'வேசைட் பெலிஷ்' என்று சொல்லப்படுகிறதே அந்த அளவுகளோடு 'ரெஸ்ட் ரெண்ட்' வசதியோடு இருக்கக் கூடிய அளவில் அங்கே செய்து தருவதற்கு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

மத்திய அரசு நிதி உதவி மற்றும் மாநில அரசு நிதி, II திட்டத்தின் ஒதுக்கீடு தேரமுந்தூரில் வழித்தட வசதிகளுடன் கூடிய உணவகம் கட்டும் திட்டம் தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(1)	(2)	(3)	(4)
78	391/90	உடுக்குறியிட்டவினா எண். 4429 திரு. சு. திருவேங்கடம், எஸ்.எல்.ஏ., 23–4–1990.	சாத்தனூர் அணைப் பகுதியில் சுற்றுலாத் துறை மூலமாக சிறிய அளவில் தங்கும் விடுதி, ஹோட்டல் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறதா என்பது குறித்து.

(5) (6)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : சுற்றுலாத் துறையின் மூலமாக தங்கும் விடுதி அமைக்கக் கூடிய செயற்குறிப்பு ஆய்வில் இருக்கிறது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள சாத்தனூர், மாவட்ட உலாத் தலமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிதி நிலை பற்றாக் குறை காரணமாக, சாத்தனூரில் தற்போது ஓட்டல் கட்ட இயலாது.

(அ.சா.கு. எண். 21155/சு. 1/90-1, நாள் 26–2–1991).

தொழில் துறை.

(1)	(2)	(3)	(4)
79	248/86	உடுக்குறியிட்ட வினா திரு. இரா. முத்தையா, எம்.எல்.ஏ., 8–4–1986.	தொழில் வாய்ப்பு இருக்கக்கூடிய பேரையூர், சாப்டூர் போன்ற பகுதிகளில் சென்கல் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பது பற்றி.

348/86 உடுக்குறியிட்ட வினா திரு. முத்தையா எம்.எல்.ஏ. 8-4-86

தொழில் வாய்ப்பு இருக்கக் கூடிய பேரையூர், சாப்டூர் போன்ற பகுதிகளில் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பது பற்றி

மாண்புமிகு திரு. ஆலூர் ஜெகதீசன் : அரசு பரிசீலித்து முடிவு செய்யும்.

மதுரை மாவட்டத்தில் துவரிமான் கிராமத்தில் சேம்பர் செங்கல் தொழிற்கூட்டுறவுச் சங்கம் ஏற்கனவே இயங்கி வருகிறது. சாப்டூர் பகுதியில் சுமார் 60 நபர்கள் செங்கற்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். மேலும் தனி நபர்களால் நடத்தப்படும் நாட்டுச் செங்கற்சூளைகள் அங்கு உள்ளன. பேரையூர் மற்றும் சாப்டூர் பகுதிகளில் செங்கற்கள் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டால் அச்சங்கம் தயாரிக்கும் செங்கற்களைச் சுமார் 53 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில்தான் விற்பனை செய்யவேண்டி இருக்கும். மற்றும் 40 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள உசிலம்பட்டி பகுதியிலும் விற்பனை செய்யவேண்டி வரும். போக்குவரத்துச் செலவு அதிக மாயிருப்பதால் கூட்டிட்டப் கூட்டுபவர்கள் இந்த சங்கங்கள் தயாரிக்கும் செங்கற்களுக்கு முன்னுரிமை தந்து வாங்கமாட்டார்கள். மதுரையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சேம்பர் செங்கற்கள் தயாரிப்பு நிலையங்களும் மற்றும் நாட்டுப் புறச் செங்சூளைகளும் உள்ளன. இத்தச் சூழ்நிலையில், கூட்டுறவுச் சங்கம் கடுமையான வியாபார போட்டியைச் சந்திக்க வேண்டியிருக்கும். மேலும் சாப்டூர் பகுதியில் செங்கற்கள் தயாரிக்கும் செலவினம் மதுரையிலும் அதனைச் சுற்றியிலும் ஆகும். செலவினத்தைவிட அதிகமாகிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில் பேரையூர் மற்றும் சாப்டூர் பகுதியில் செங்கல் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களைத் தொடங்குவது இலாபகரமானதாக அமையாது எனக் கருதப்படுகிறது.

(அ.சா.கு. எண். 15950/எஸ்டி 1/90, நாள் 31-12-1990).

(1) (2) (3) (4)

80 387/87 உடுக்குறியிட்ட வினா எண். 12369-திரு. தா. மாரி முத்து, எம்.எல்.ஏ., நாள் 20-4-1987.

புதிதாக தேயிலை தொழிற்சாலை அமைக்கும் நிட்டம் அரசிடம் உள்ளதா?

(5) (6)

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : ஆம். நீலகிரி மாவட்டத்திலுள்ள கின்னக்கோரை தொழிற்கூட்டுறவுத் தேயிலை தொழிற் சாலையில் கட்டுமானப் பணிகள் முடிந்து தயாரிப்பு தொடங்கப்பட்டுள்ளதா?

அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை

தேயிலைத் தொழிற்சாலை மற்றும் எனைய கட்டிடங்களின் கட்டுமானப் பணியும் அனைத்து எந்திரங்களை நிறுவுகின்றப் பணியும் முடிவடைந்து கின்னக் கோரை தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையில் 7-4-1989 முதல் பதப்படுத்தப் பட்ட தேயிலையின் (Made Tea) உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இக்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை 7-4-1989 முதல் உற்பத்தியைத் தொடங்கியது.

1989-90 ஆம் ஆண்டில் 137.35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 18.89 இலட்சம் கிலோ தேயிலையை பசுந் தேயிலை (Green Tea) உற்பத்தி செய்வதென்று வரையறுத்து அந்தக் காலஅளவில் இத்தொழிற்சாலை 148.43 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4.97 இலட்சம் கிலோ பதப்படுத்தப்பட்ட தேயிலையை உற்பத்தி செய்துள்ளது. இது 148.14 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தேயிலையை விற்பனை செய்துள்ளது. 1990 ஜூலை இங்களுடன் முடிவடைந்த நான்கு மாதங் களில் இத்தொழிற்சாலை 41.61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 5.75 இலட்சம் கிலோ

தேயிலையையும் 55.91 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 1.54 இலட்ச நிலோ பதப்படுத்தப் பட்ட தேயிலையையும் (Made Tea) இத்தொழிற்சாலை உற்பத்தி செய்துள்ளது. நடப்பாண்டில் 68.34 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தேயிலையை அது விற்பனை செய்துள்ளது.

(அ.சா.கு. எண். 47313/எஸ்.ஐ.இ. 2/90-3, நாள் 14-12-1990).

(1)	(2)	(3)	(4)
81	268/89	உறுக்குறியிட்ட வினா எண். 450, வினா நாள் 6-5-1989.	திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ. நிலக்கோட்டை பகுதியில் ஒரு தொழிற்சாலை அமைப்பது குறித்து திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்திடமிருந்து விரைவில் கருத்து கேட்பு பெறுவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி வலியுறுத்துகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் உறுதி மொழிக்கு ஏற்ப 1990-91 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா.

(5)	(6)
நிலக்கோட்டை பகுதியில் ஒரு தொழிற்சாலை அமைப்பது குறித்து.	திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பல தொழில் அமைவு தொழிற்பேட்டை ஒன்றை நிறுவும் பொருட்டு 161.61.5 ஹெக்டேர் தரிசு நிலத்தை நில எடுப்பு செய்வதற்கு அரசு ஆணை நிலை எண்.92, தொழில் துறை, நாள் 27-2-1991-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 37722/எம்ஜஜி- II/89-3, நாள் 4-4-1991).

(1)	(2)	(3)	(4)
82	4/90	1989-90 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம் 25-1-1990.	நிலக்கோட்டை பகுதியில் ஒரு தொழிற்சாலை அமைப்பது குறித்து.

(5)	(6)
நிலக்கோட்டை பகுதியில் ஒரு தொழிற்சாலை அமைப்பது குறித்து.	திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பல தொழில் அமைவு தொழிற்பேட்டை ஒன்றை நிறுவும் பொருட்டு 161.61.5 ஹெக்டேர் தரிசு நிலத்தை நில எடுப்பு செய்வதற்கு அரசு ஆணை நிலை எண் 92, தொழில் துறை, நாள் 27-2-1991-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 37722'எம்ஜஜி- '89-3, நாள் 4-4-1991).

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
83	4/90	உடுக்குறியிட்ட வினா எண் 1,118 துணை வினா திரு. குமரி அனந்தன் சட்டமன்ற உறுப்பினர். 19—1—1990.	அடியக்கா மங்கலம், நரிமணம் போன்ற பகுதிகளில் எடுக்கப் படுகிற குருடு ஆயில் என்கிற கச்சா எண்ணெய்க்கு ராயல்டி பெறுவது குறித்து.	மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : நெய்வேலிக்கே ராயல்டி வேண்டும் என்று வற்புறுத்திய அரசு நரிமணத்தை விட்டுவிட்டது.	கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவிற்கு உரிம வரியை மைய அரசு நிர்ணயம் செய்கிறது. கச்சா எண்ணெய்க்கு உரிம வரி டன் ஒன்றுக்கு ரூ. 192 இயற்கை வாயுவிற்கு அதன் அடிப்படை விலையில் 10 விழுக்காடு உரிம வரியாக விதிக்கப் படுகிறது. இது இயற்கை வாயுவின் எரிசக்தி மதிப்பைப் பொறுத்து 1,000 கன மீட்டருக்கு ரூ. 140 என்று கணக்கிடப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டிலிருந்து 1989-90ஆம் ஆண்டு வரையில் இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவின் உற்பத்தி அளவு மற்றும் அவைகளுக்கு இந்திய எண்ணெய் மற்றும் நில வாயுக் கமிஷனால் செலுத்தப்பட்ட உரிம வரியின் விவரங்கள் இணைக்கப்பட்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. (அ. சா. கு. எண் 12708/எம்.எம்.சி.-2/90-10, நாள் : 11—12—1990.)

அட்டவணை.

உற்பத்தி அளவு.

வருடம்.	இடம்.	(எண்ணெய் (மெட்ரிக் டன்களில்.)	இயற்கை எரி வாயு (கன மீட்டரில்)	கச்சா எண்ணெய்க்கு செலுத்திய உரிம வரித்தொகை. (டன்னிற்கு ரூ. 192 வீதம்.)	இந்திய எண்ணெய் மற்றும் நில வாயுக் கமிஷனால் இயற்கை வாயுவிற்கு செலுத்திய உரிம வரித் தொகை அடிப்படை விலையில் 10சதவீதம் (வாயுவின் கலோரி மதிப்பை பொறுத்து குறைந்த பட்சக் கட்டணம் 1,000 கன மீட்டருக்கு ரூ. 140.)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1985-86	நரிமணம்	560.620		1,07,639.00	...
1986-87	நரிமணம்	5380.545		10,33,064.00	..
1987-88	நரிமணம்	8441.615			
	கோவில்களப்பல்	3061.386	116727	23,30,948.00	16,954
	புவனகிரி	637.352			
1988-89	நரிமணம்	27239.160			
	கோவில் ளைப்பல்	96.000	2127857	55,15,688.00	2,91,678
	புவனகிரி	1392.384			
1989-90	நரிமணம்	184948.608			
	புவனகிரி	825,240	4473688	3,84,83,977.00	7,15,773
	நன்னிலம் மற்றும் அடியக்காமங்கலம்	14663.540			

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
84	114-90	உடுக்குறியிட்ட வினா எண் 5363, துணை வினா திரு. ஆர். முனிரத்தினம், எம் எல் ஏ, 22—3—1990.	திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் எக்ட்ரானிக்ஸ் சம்பந்தமாக தொழில் தொடங்கப் படுமா என்பது குறித்து

(5)	(6)
மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : 32 ஏக்கரில் தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டம் நடப்பு ஆண்டு இறுதிக்குள் முடிக்கப் பட்டு தொழில் முனைவோர்களுக்கு வழங்கப் படும். உறுதிமொழிக்குழு தற்போது கேட்டுள்ள விவரம் : ஒதுக்கீடு செய்யப்படாத எஞ்சிய 20 தொழிற் கூடங்கள் தற்போது காலியாக உள்ளதா ?	காக்களூரில் தொழிற்கூடங்கள் தவணை முறையில் ஒதுக்கீடு செய்யும் திட்டம் அமல்படுத்தப்பட்ட பின், அனைத்து தொழிற் கூடங்களும் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. தற்பொழுது தொழிற்கூடம் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக இல்லை.

(அ. சார். கு. எ.எண் 44421/எஸ.ஐ.சி.-1/91-2 நாள் 30—9—91.)

85	178-90	உடுக்குறியிட்ட வினா 8158 துணை வினா திரு. ஆர். எஸ். ரூபர் எம். எல். ஏ., 29—3—1990.	திண்டி திரு. வி. க. தொழிற்பேட்டை அருகில் 15 ஏக்கர் நிலத்தை இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்திற்கு தந்ததை பலர் ஆக்கிரமித்து உள்ளார்கள். அந்த நிலத்தை திரும்பப் பெற்று சிறிய சிறிய தொழிற்கூடங்கள் அமைப்பது குறித்து.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : பரிசீலனை செய்யும்.	அரசு இதைப்பற்றி இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு திண்டி தொழிற்பேட்டையில் 51.821 ஏக்கர் நிலத்தை தொழிற்கூடம் அமைக்கவும் தொழிலாளர் குடியிருப்புகளைக் கட்டவும் அரசு கீழ்க் கண்டவாறு ஒதுக்கீடு செய்தது :— 1. தொழிற்கூடம் : 20.91 ஏக்கர் ஏற்கனவே தொழிற்கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2. தொழிலாளர் குடியிருப்பு : 14.98 ஏக்கர் 80 சதவீதம் நிலம் தொழிலாளர்கள் குடியிருப்பு கட்ட உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. 3. தொழிற்கூடம் : 4.91 ஏக்கர் மொத்த நிலமும் தொழிற்கூடத்திற்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. 4. தொழிலாளர் குடியிருப்பு : 11.021 ஏக்கர் நிலம் உபயோகப்படுத்தாமல் உள்ளது. சுமார் 14.00 ஏக்கர் நிலத்தை இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் உபயோகப் படுத்தாமல் உள்ளது. அதில் தொழிற்கூடம் கட்டுவதற்கு நிலம் தருமாறு 1988-ம் வருடம் மேற்கண்ட நிறுவனத்திடம் கோரப்பட்டது. அதற்கு அவர்கள் அந்த நிலத்தில், தொழிலாளர் குடியிருப்புகள் கட்டும் உத்தேசம் உள்ளது என்று கூறி அந்த கோரிக்கையை நிராகரித்துவிட்டார்கள். இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தைச் சுற்றி எந்தவிதமான ஆக்கிரமிப்பும் இல்லை. மேலும், மேற்கண்ட நிறுவனம் அவர்களது நிலத்தைச்சுற்றி முள்வேலி அமைத்துள்ளார்கள்.

(தொழில்துறை அ. சார். கு. எ.எண் 35040/எஸ். ஐ. சி.-1/90-9, நாள் : 25—10—1990.)

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH EVEN IF UNPLEASANT

(1)	(2)	(3)	(4)
86	3/90	உடுக்குறியிட்ட வினா எண் 2127 துணை வினா திரு. கே. ரமணி, எம்.எல்.ஏ., 20—1—1990.	தொ. ப. கல்வி மாணவர்களுக்கு அவர்களுக்குத் தெரிந்த மொழியில் கேள்வித்தாள்கள் அச்சிட்டு அனுப்புவது குறித்து.

(5)	(6)
மாண்புமிகு திரு. கே. என். நேரு மத்தியில் உள்ளவர்களிடம் கடிதத் தொடர்பு கொண்டுள்ளோம். முடிவு வந்தவுடன் தெரிவிக்கப்படும்.	அகில இந்தியத் தொழில் தேர்வில் தமிழில் வினாத்தாள்கள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை பற்றி மத்திய அரசிடம் தொடர்பு கொள்ளப்பட்டது. மத்திய அரசு ஒரு உப குழுவை நியமித்தது இது குறித்து பரிசீலனை செய்த உப குழு தனது அறிக்கையை மத்திய அரசு அச்சகங்களில் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே அச்சடிக்க இயலும் என்றும் தமிழில் அச்சடிக்க இயலாது எனவும், ஆனால் தேர்வு தொடங்க 6 வாரங்களுக்கு முன்பே அனைத்து பாடங்கள் மற்றும் நெடுமுனை பிரிவுகளில் வினாத்தாள் ஒன்று மட்டும் ஆங்கிலத்தில் அனுப்பப்படும் என்றும், அதை மொழி பெயர்த்து தேவையான நகல்களை மாநில அரசு எடுத்துப் பயிற்சியாளர்களுக்கு கொடுக்கலாம் எனவும் கூறியுள்ளது. அதன்படி தேவையான அளவு வினாத்தாள்களை சென்னை அரசு மதிய அச்சகத்தில் அச்சடித்து பயிற்சியாளர்களிடம் வழங்கவும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநருக்கு அரசாணை எண். நிலை. 44, நாள். 1—3—1991-ல் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகவவ வறுதிமொழி நிறைவேற்றப்பட்டது.

(அ. சா. கு. எண். 1488/எஸ். 1/ 90-7, நாள் : 28—2—1991).

87	78/90	உடுக்குறியிட்ட வினா எண் 5538-ஏ துணை வினா திரு. உ. ரா. வரதராசன், எம். எல். ஏ. 19—3—1990.	அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற வர்களின் வாரிசுகளுக்கு வேலை அளிப்பதைப் பொறுத்த வரையில் வயது வரம்பு உயர்த்தி அறிவிக்கப்படுமா என்பது குறித்து.

(5)	(6)
மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : இதுகுறித்து அரசு யோசிக்கும் என உறுதிமொழி அளித்து உள்ளார்.	இது குறித்து அரசு நன்கு பரிசீலனை செய்ததில் தற்போதுள்ள நிலையே நீடிக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(அ. சா. கு. எண் 391/1/91-1, நாள் 20—2—1991).

(1)	(2)	(3)	(4)
88	233/90	உடுக்குறியிட்ட வினா எண். 13, துணை வினா திரு. ஏ. கோவிந்தராஜன், எம். எல். ஏ., 3—4—1990	திருத்தப்பட்ட தொழிற் தகராறு சட்டப் படியாவது ஒழுங்கு விதி முறைகளை கடைபிடிக்காத தொழில் நிறுவனங்கள் மீது சட்ட வடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பது குறித்து

மாண்புமிகு திரு. கே. எல். நேரு, உறுப்பினருடைய கருத்தை பரிசிலனை செய்யலாம்.

தொழிற் கங்கங்களை அங்கீகரிக்கும் வகையிலும் நேர்மையற்ற தொழிற் பழக்கங்களை தடுக்கும் வகையில் தொழிற் தகராறு சட்டம் மற்றும் தொழிற்சங்க சட்டங்களை திருத்துவது பற்றிய கருத்துரு மத்திய அரசின் பரிசிலனையில் உள்ளது. மத்திய அரசு இது குறித்து சட்ட திருத்தங்களை வெளியிட்டபின் அதன் அடிப்படையில் மாநில அரசு மேல் நடவடிக்கை எடுக்கும். தொழிற் தகராறு சட்டம் அட்டவணை 5-ல் கூறப்பட்ட நியாயமற்ற தொழிற் உறவு நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தொடரலாகும். தொழிற்தாராறு சட்டப் பிரிவு 25(ஏ) வின்படி தண்டனை உண்டு. இது குறித்து குறிப்பாணை தாவா எழுப்பினால் அரசுக்குரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

(அ. சா. கு. எண் 47016/டி-2/90-4 நாள். 10—12—1990.)

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (குவ. 1) துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
89	32/83	உடுக்குறியிட்ட வினா எண் 5043 திரு. டி. கே. நல்லப்பன், எல்.எல்.ஏ., 4—2—1983.	பெருந்துறை தொகுதியில் நிலவரும் குடிதண்ணீர் வழங்கப்படாதது குறித்து 6—6—1980-ல் போராட்டம் நடத்தியதை தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அம்மக்களுக்கு குடி தண்ணீர் எப்போது கிடைக்கும் என்கின்ற விவரம் குறித்து.

உறுதிமொழியின் சுருக்கம். ஏற்கெனவே அளித்துள்ள துறையின் பதில்.

(5)

மாண்புமிகு திரு. எஸ். இராசவானந்தம்: பெருவளப் பஞ்சூர், சிறுவானூர், குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி ஆகிய பேரூராட்சிகளின் (நிங்களூர் கிராமம் உட்பட) கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான ஆய்வுத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை பொறியாளரின் பரிசிலனையில் உள்ளது. இத்திட்டம் வாரியத்தின் ஒப்புதல் பெற்று அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதும் பரிசிலனை செய்து ஒப்புதலுக்காண் நடவடிக்கை எடுக்கப்படும்.

(6)

பெருவளப்பூர், சிறுவானூர் குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி ஆகிய பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் நிதிநிலைக் கேற்ப செயற்குறிப்பை திருத்தியமைக்க களப்பணியாளர்களை குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுள்ளது. எனவே பவானி ஆற்றில் மக்னம்கோம்பை அருகே பூமியில் உள்மட்ட நீரை எடுத்து விநியோகம் செய்ய ஒரு மாற்றுத் திட்டம் களப்பணியாளர்களால் தயாரிக்கப்படுகிறது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அறிவித்துள்ளது.

தற்போதைய நிலை குறித்த பேரவை கேட்டுள்ள விவரம்.

துறையின் பதில்.

(7)

ஏற்கெனவே அளிக்கப்பட்ட பதில் ஒரு தற்காலிக அறிக்கையாக இருந்ததால், இவ்வுறுதிமொழிக்கான இறுதி அறிக்கை அளிக்குமாறு கோரப்படுகிறது.

(8)

ஊத்துக்குளி, கொளப்பலூர் குறள்தூர், சிறுவாலூர் மற்றும் கலியங்கியம் ஆகிய பேருராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்ட மதிப்பீடு ரூ. 590.116 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு வாரிய ஆணை எண். 329, நாள் : 10–12–1987-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இங்களூர் கிராமம் வழியோரத்தில் பயன்பெறும் கிராமமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டம் 3/93-ல் பயனுக்கு கொண்டு வரப்படும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

(அ.சா.கு. எண். 21195/கு.வ.1/91-3, நாள் : 30–10–1991.)

(1)	(2)	(3)	(4)
90	340/86	குறுகிய கால வினா எண். 9 13 திரு. ஜே. முகம்மது கனி, எம்.எல்.ஏ., 25–4–1986.	புதுக்கோட்டை நகருக்கு காவேரி உபரி நீரை குடிநீராக்க தமிழக அரசு சுமார் 11.00 கோடி ரூபாய் அனுமதித்து உள்ளது உண்மையா என்பது குறித்து.

(5)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: புதுக்கோட்டை நகருக்கும் மற்றும் சில வழியோர கிராமங்களுக்கும் காவேரிநீரை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்குவதற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(6)

நீராதாரங்களின் ஆய்வுப்பணிகளை முடித்து, நீர் ஆதாரம் முடிவு செய்தபின், புதுக்கோட்டை நகராட்சி மற்றும் அதன் வழியோரக் கிராமங்களும் பயனடையக் கூடிய வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் வடிவமைக்கப்படும்.

(7)

குழுவின் குறிப்புரை

மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டவுடன் திட்ட வேலைகள் தொடங்கப்பட்டு விட்டனவா? தற்போது என்ன நிலையில் உள்ளது?

(8)

புதுக்கோட்டை நகராட்சி சீனார், இலுப்பூர், அன்னவாசல் பேருராட்சிகள் மற்றும் 15 வழியோரக் கிராமங்களுக்கு உலக வங்கி உதவியுடன் காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை ரூ. 21.92 கோடியில் அமுலாக்க அரசு ஆணை எண். 839, ந.நி. மற்றும் கு.வ. துறை நாள் 6–9–90-ல் ஆட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கென தனிக்கோட்டம் ஒன்று 1–7–1990 முதல் இயங்கி வருகிறது. இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படும். இத்திட்டத்தை ஜூன் 1993-க்குள் முடித்து பயனுக்கு கொண்டு வர உத்தேசித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

(அ.சா.கு. எண் 68574/கு.வ.4/89–13, நாள்: 14–3–1991.)

(1)	(2)	(3)	(4)
91	352/85	உடுக்குறியிட்ட வினா 927 திரு. இ. அன்பழகன், திருமதி பா. வளர்மதி, திரு. கே. பிரேம்குமார், எம்.எல்.எக்கள், 8-7-1985.	நகராட்சி நிதி கார்ப்பரேஷன் தற்போது செயல்படுகிறதா? அதன் விவரம் என்ன?

(5)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நகராட்சி நிதி கார்ப்பரேஷன் அமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

(6)

நிதி பற்றாக்குறையால் நலிந்துள்ள நகராட்சிகள் நமது எல்லைக்குள் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள நிதியுதவி மற்றும் தொழில் நுணுக்க உதவி அளிக்கும் நோக்கத்துடன் நகர நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம் ஏற்படுத்த 18-11-89 நாளிட்ட நகராட்சி நிர்வாகம், துறையின் அரசாணை நிலை எண். 854-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இக்கழகத்தின் பங்கு மூலதனம் ரூ. 2.00 கோடி ஆகும். பங்கு ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்பு கொண்ட இரண்டு இலட்சம் பங்குகளைக் கொண்டுள்ளது. அதில் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் பங்குகளை மாநில அரசும் 78 ஆயிரம் பங்குகளை நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளும், 20 ஆயிரம் பங்குகளை வைட்கோ நிறுவனமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இக்கழகம் மார்ச் 1990 முதல் செயல்பட்டு வருகிறது.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை : அ.சா.கு. எண் 51570/ந1/90-2, நாள் : 15-10-1990).

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை.

(1)	(2)	(3)	(4)
92	83/87	உடுக்குறியிடாத வினா எண் 4769 திரு. பி. என். இராமச்சந்திரன், எம்.எல்.ஏ., 11-3-1987.	பட்டுக்கோட்டை வட்டம், வடகாடு சேரி காலனி, பர்மா காலனி முதலிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா? என்பது குறித்து.

(5)

மாண்புமிகு திரு. S. இராசாராம் : வடகாடு சேரி காலனி ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 1986-87 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்துக்கொண்டு திட்டம் நிறைவேற்றப்படும். பர்மா காலனி குடியிருப்பில் உள்ள குடிநீர் உப்பு நீராக மாறிவிட்டபடியால் இக்குடியிருப்பை வகை 1 லிருந்து 3-க்கு மாற்றம் செய்து குடிநீர் வழங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

குமுவின் குறிப்புரை: குடிநீர் வழங்கும் திட்டம் செயலாக்கப்பட்டு விட்டதா ?

(6)

(1) பட்டுக்கோட்டை வட்டம், வடகாடு பகுதிக்கு குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் 1988-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வடகாடு சேரி காலனியிலிருந்து குழாய் அமைத்து 15 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (2) வடகாடு சேரி காலனிக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியிலிருந்து 2. கி.மீ. தூரத்திற்கு பகிர்மானக் குழாய்கள் அமைத்து 10 பொது குழாய்கள் மூலம் விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் ஒரு மின்விசைத் திட்டம் செப்டம்பர் 89-ல் முடிக்கப்பட்டுள்ளது.

(3) மறவக்காடு ஊராட்சியில் உள்ள பர்மா காலனிக்கு மறவக்காடு குடிநீர் திட்டத்திலிருந்து மூன்று பொதுக்குழாய்கள் அமைத்து குடிநீர் வழங்கும் முறை குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் மார்ச் 1990-ல் உருவாக்கப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 79768/குவ. 4/88-14, நாள் : 28-12-1990).

(1)	(2)	(3)	(4)
93	85/87	உடுக்குறியிடாத வினா எண். 8149 திரு. அ. வெங்கடாசலம், எம்.எல்.ஏ., 11-3-1987.	புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி வடகாட்டில் மேல் நிலைக் குடிநீர் தொட்டி கட்டி குடிநீர் வழங்கல் திட்டம் அரசிடம் உள்ளதா? ஆம் எனில் அதன் திட்ட மதிப்பு எவ்வளவு? திட்டம் எப்போது துவங்கும்?

(5)	(6)
மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) ஆம். வடகாடு மற்றும் 5 குடியிருப்புகளுக்கு ரூ. 22 இலட்சம் செலவில் ஆயுள் காப்பீட்டுக் கழக உதவியுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. திட்ட வேலைகள் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.	திருவரங்குளம் ஒன்றியம் வடகாடு செட்டித் தெரு குடிநீர்த் திட்டத்தின் கீழ் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 24 பொது நீருற்று இணைகளும் முடிக்கப்பட்டு 15-12-1990 முதல் உபயோகத்தில் இருந்து வருகிறது. அத்துடன் 20-1-1991-ல் பராமரிப்பிற்காக ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

(ந.நி.(ம) கு.வ. துறையின் அ.சா.கு. எண் 76769/கு.வ.4./88-17 நாள் : 18-4-1991.)

(1)	(2)	(3)	(4)
94	286/87	உடுக்குறியிடாத வினா எண். 8922, திரு. க. பாரமலை, எம்.எல்.ஏ., 4-4-1987.	மாணாமதுரைத் தொகுதி திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் கீழடி கிராமத்தில் பழமைவாய்ந்துள்ள இரும்பாலான மேல்நிலைத் தொட்டியை சிமெண்ட் தொட்டியாக மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது பற்றி.

(5)	(6)
மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் மாணாமதுரைத் தொகுதி திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழடி கிராமத்தில் பழமைவாய்ந்துள்ள இரும்பாலான மேல்நிலைத்தொட்டியை சிமெண்ட் தொட்டியாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழடி குடியிருப்பில் பழுதான நிலையில் இருந்த இரும்பு மேல்நிலைத் தொட்டி மாற்றப்பட்டு, கான்கிரீட்டிலான மேல்நிலைத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இக்குடிநீர்த் திட்டம் மக்கள் பயனுறும் வகையில் செயல்பட்டு வருகிறது.

(அ.சா.கு. எண் 11565/கு.வ. 4/89-24, நாள் : 15-4-91)

(1)	(2)	(3)	(4)
95	58/89	மானியக் கோரிக்கை எண். 18, மருத்துவம் மீதான மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் பதிலுரையின்போது திருமதி பாப்பாஉமாநாத் எம்.எல்.ஏ., எழுப்பிய வினா 10-4-1989.	திருச்சி மாவட்டம் பொன்மலை கூட்டு குடிநீர் திட்டம் என்ற ஒரு திட்டம் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமலிருப்பதை இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கான ஏற்பாடு உண்டா என்கிற விவரம்.

(5)	(6)
மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி அந்த குடிநீர் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. நிச்சயமாக கூடிய விரைவில் அதை செய்வதற்கு அரசு முயலும்.	பொன்மலை நகராட்சி, ஆலந்தூர் நகர பஞ்சாயத்து மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு ஒரு கூட்டு குடிநீர்த் திட்டம் ரூ. 421.97 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் அளிப்பதற்கு அரசின் அங்கீகாரம் எதிர் நோக்கி பணிகள்

முன்னேற்றத்தில் உள்ளன. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் முடிக்கப்பட்டு குழாய் இணைப்பு வேலை நடந்து கொண்டு வருகிறது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் முழு அளவில் 1991-ம் ஆண்டு முடிவடையும் என எதிர் பார்க்கப்படுகிறது. ஆனால் பொன்மலை நகராட்சியில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக உடனடி குடிநீர் நிவாரத்திற்காக தற்காலிகமாக சோதனை நீர் உறிஞ்சி கிணறு மூலமாக குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 16.37 லட்சம் அளவில் தயாரிக்கப்பட்டு வாரியத்தின் ஒப்பு நலும் வழங்கப்பட்டு தற்போது பணி செயலில் உள்ளது.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் : அ.சா.கு. எண் : 51581 /90—14, நாள் 26—12—1990.)

(1)	(2)	(3)	(4)
96	157/89	உடுக்குறியிட்ட வினா எண். 885, திரு. வினாயகம், எம்.எல்.ஏ., 25—7—1989.	ஸ்ரீரங்கம் முனிசிபாலிடியிலே 80 அடிக்கு மேல் பில்டர் பாணிட் போட்டு சப்ளை கரல்மாக அங்குள்ள மோட்டார் வேலை செய்யாமல் இருந்து கொண்டு வருகிறது. எனவே புதியதாக போடுவதற்கு பதிலாக ஏற்கெனவே இருப்பதை ரிப்போர் செய்ய முடியுமா எனில் விவரம் குறித்து.

(5)	(6)
மாண்புமிகு திரு. காஞ்சி. பி. மனோகரன் : கோரிக்கை நிறைவேற்றப்படும்.	1987-ஆம் ஆண்டு ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், அம்மா மண்டபம் ரோட்டில் உள்ள குடிநீர் தொட்டி இடத்தில் ஒரு நுளைக்கிணறு போடப்பட்டது. அது அமைத்ததற்கான தொகையும் நகராட்சியில் தரப்படவில்லை. அவ்விடத்தில் நகராட்சியால் 8 நுளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு பயனில் உள்ளது. மேலும் தற்போது நகராட்சி மோட்டார் ஏதும் ரிப்போரில் இல்லையென்றும், பொதுமக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது எனவும் ஸ்ரீரங்கம் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

(அ.சா.கு. எண். 63018/குவ. 5/89 15, நாள் : 7—11—90.)

97	219/90	உடுக்குறியிடாத வினா எண். 4642, திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 2—4—1990.	பேராவூரணி ஒன்றியம், பெரிய தெற்கு காட்டில் மேல்நிலை நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா என்பது குறித்து.
		மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ நிகமணி : 1990ம் ஆண்டு மார்ச் மாதம் பணிகள் முடிவுறும்.	பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு பஞ்சாயத்து பெரிய தெற்குக் காடு குடியிருப்பிற்கு 1990—91 ஆம் நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 1.5. கி.மீ. நீளத்திற்கு பகிர்மான குழாய், 6 பொது குடிநீர் குழாய் அமைத்து திட்டம் 12/1989-ல் முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும்

(5) (6)

வறட்சி நிவாரணத் திட்டங்களின் கீழ் இரண்டு ஆழ்குழாய் கிணறு அமைத்து இந்தியா மார்க் 2 கையிறைப்பான் பொருத்தி குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 35213/குவ-4/90-10, நாள் : 14 3 1991).

(1)	(2)	(3)	(4)
98	222/90	உறுக்குறியிடாத வினா எண். 4763 திரு. ஆர். சிவகாரம், எம்.எல்.ஏ., நாள்: 2-4-1990.	பேராவூரணி தொகுதி நீர்த்தேக்கத்தொட்டி என்பது குறித்து. சோலைக்காட்டில் (வடக்கு) மேல்நிலை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா

(5) (6)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ கைமணி : திட்டப்பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவுறும். சேதுபாவா சத்திரம் ஒன்றியம் சோலைக்காடு குடியிருப்பிற்கு 1990 ஆம் ஆண்டில் ரூ. 2.40 லட்சம் செலவில் விரைவு படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 7 பொது குடிநீர் குழாயும் அமைத்து, திட்டம் 3/90ல் முடித்து மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 35187/குவ. 4/90 10, நாள் : 20 3 1991.)

99	435/90	உறுக்குறியிட்ட வினா எண். 6505, துணை வினா திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை, எம்.எல்.ஏ., 26-4-1990.	கன்னியாகுமரி மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாக நீக்க நிலத்தடி நீரை கிணறுகள் தோண்டி ஆழ்குழாய்கள் மூலம் குடிநீர் எடுப்பது குறித்து.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ கைமணி : அதற்கான திட்டங்களை வகுக்குமாறு ஆணையிடப்பட்டிருக்கிறது. அதற்கான ஆரம்பப் பணிகள் விரைவில் துவக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்ட குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆழ்துளைக் குழாய்-கிணறுகள் தோண்டப்பட்டு, கைப்பம்புகள் பிட்டத்திற்கு குடியிருப்புகளில் கைப்பட்புகள் போடப்பட்டின்றன. இதை பம்புள் திட்டத்தில் நீராதாரத்தின் தன்மையைப் பொருத்து விசைப்பம்புகள் பொருத்தி இறந்து வெளிக்கிணறுகள் ஊடுருவல் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. எனவே கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் ஆகிய இரண்டின் மூலமாகவும் நிலத்தடி நீரானது ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள், திறந்தவெளிக்கிணறுகள் மற்றும் ஊடுருவல் கிணறுகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் 2190 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. அதில் 1840 குடியிருப்புகளுக்கு கையிறைப்பான் மூலமாகவும், 350 குடியிருப்புகளுக்கு விசையிறைப்பான் மூலமாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது. இதனால் பயன்பெறும் மக்கள் தொகை 5,56,911 ஆகும்.

மேலும் குழித்துறையாறு நீர் படுகையின் மூலம் சேர்க்காணும், 4 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு :—

திட்டத்தின் பெயர்.	பயன்பெறும்.		
	பேரூராட்சிகளின் எண்ணிக்கை.	வழியோரக் கிராமங்களின் எண்ணிக்கை.	மக்கள் தொகை.
(1)	(2)	(3)	(4)
1. குழித்துறையாறு கூட்டுக் குடிநீர் திட்டம்.	8	8	1,53,265
2. பைங்குளம் கூட்டுக் குடிநீர் திட்டம்.	1	2	31,359
3. முழுமோடு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.		15 (கிராம பஞ்சாயத்துக்கள்)	10,454
4. கவியக்காவிளை, மெதுகுமல் கூட்டுக் குடிநீர் திட்டம்.	2	19	41,057

(அ.சா.கு. எண். 43207/கு.வ.5/90ந1, நாள்: 22—4—1991.)

(1)	(2)	(3)	(4)
100	527/90	உடுக்குறியிடாத வினா 5775. திரு. கே. ரவி அருணன், எம்.எல்.ஏ., 22—8—1990.	வெள்ளங்குழி குடிநீர்த் திட்டத்திலிருந்து அப்பகுதியில் இருக்கிற அருந்ததியர் காலனிக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படுமா என்பது குறித்து.

(5)	(6)
மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி :	வெள்ளங்குழி கிராமத்தைச் சேர்ந்த அருந்ததியர் காலனியில் ஒரு பொதுக் குழாய் அமைத்து வெள்ளங்குழி குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.
பஞ்சாயத்தின் அனுமதி பெற்று அருந்ததியினர் களுக்குத் தனியாக ஒரு பொது நல்லி அமைத்துத் தரப்படும்.	

(அ.சா.கு. எண். 56317/கு.வ. 5/90-9, நாள் 24—4—1991).

101	498/90	பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை உடுக்குறியிட்ட வினா எண். 693, துணை வினா— திரு. என். பழவிவேல், எம்.எல்.ஏ., 20—8—1990.	தமிழ்நாடு தேர்வாணைக் குழுமத்தின் உறுப்பினர்களைக் பெண்களை நியமிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்பது குறித்து.

உறுதிமொழி விவரம்		உறுதிமொழியின்மீது அரசு எடுத்த நடவடிக்கை.
(5)		(6)
மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவற்றையும் அரசு உரிய நேரத்தில் பரிசிலிக்கும்.		23-11-1990-ம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர் திருத்தத் (பணி. எம்.) துறையின் அரசு ஆணை நிலை எண். 482-ன்படி தமிழ்நாடு தேர்வாணைக் குழுவில் பெண் உறுப்பினராக கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் எல்.ஆர்.ஜி. நாயுடு அரசு பெண்கள் கலைக் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராக பணியாற்றி வந்த திருமதி கே. நாயகம் என்பவர் நியமிக்கப்பட்டு உள்ளார்.

(பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அ.சா.கு. எண். 84944/பணி.எம்./90-1, நாள் 28-12-1990.)

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை.

வரிசை எண். (1)	உறுதிமொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
102	11/86	உடுக்குறியிட்ட வினா 2034, துணை வினா திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ., [24-4-1985. 10-1-1986 நாளைய	5 ஆண்டு அல்லது 3 ஆண்டு லா படித்த பட்டதாரிகளை சீனியர் லாயர்ஸ் ஜூனியர்களாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்களுக்கு 'லா' ஆபர்ஸ் பயிற்சி அளிக்க வழி செய்யப்படுமா?

(தமிழ்நாடு சட்டப் பேரவை அ.சா.கு. எண். 746/எல்./86].

உறுதிமொழி விவரம்.	குழுவின் குறிப்புரைகள்.	குறிப்புரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)	(7)
இது அரசின் பரிசிலனையில் உள்ளது.	துறையின் பதில் குறிப்பாக இல்லை. குறிப்பான பதில் எதிர்பார்க்கப் படுகிறது. (14-7-1990 அன்று நடைபெற்ற குழுவின் குறிப்புரை.)	உறுதிமொழி எண். 11/86 தொடர்பாக விரிவான பதில் இத்துறையின் அ.சா.கு. எண். 37501/ஒ.ச.2/87-6, நாள் 26-2-1990-ல் அனுப்பப் பட்டுள்ளது. குழு கேட்டுக்கொண்ட கூடுதல் விவரங்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது :—

இந்திய வழக்கறிஞர் மன்றம் மற்றும் தமிழ்நாடு வழக்கறிஞர் மன்றம் ஆகியவை கேட்டுக்கொண்டதற்கிணங்க சட்டப் பட்டதாரிகளுக்கு வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெற அனுப்பும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் திட்டத்தின்படி ஆண்டுதோறும் பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த 20 சட்டப் பட்டதாரிகள் மூத்த பிரபல வழக்கறிஞர்களிடம் மூன்று ஆண்டுகளுக்கு பயிற்சி பெற அனுமதிக்கப்படுகிறார்கள். பயிற்சி அளிக்கும் வழக்கறிஞர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5,001 மதிப்பூதியமாகவும், பயிற்சிபெறும் சட்டப்பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 500 உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 1988-89-ம் ஆண்டில் 10 வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெற 20 சட்டப் பட்டதாரிகளு

அனுப்பப்பட்டனர். (அரசாணை எண். 67, பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறை, நாள் 23—1—1989 மற்றும் அரசாணை எண். 21, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 23—1—1990) நகல்கள் இணைக்கப்பட்டுள்ளன. 1989-90 ஆம் ஆண்டிற்கு மேலும் 20 சட்டப் பட்டதாரிகள் தேர்ந்து எடுக்கப்பெற்று அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (அரசாணை எண். 223, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 30—10—1990-ன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

(அ.சா.கு. எண். 14277/பி.ந.2/90-1, நாள் 4—12—1990.)

(1)	(2)	(3)	(4)
103	390/90	உடுக்குறியிட்ட வினா 5760, திரு. பி. என். வல்லரசு, எம்.எல்.ஏ., 23—4—1990.	கள்ளர், மறவர், அகமுடையர் என்ற மூக்குலத்தோர் இனத்தை, தேவர் இனம் என்ற பெயரில் அழைத்திட அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

உறுதிமொழி விவரம். (5)	துறை எடுத்த நடவடிக்கை. (6)
மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது தொடர்பாக தமிழ்நாடு தேவர் பேரவை மற்றும் தமிழ்நாடு தேவர் (கள்ளர்) இனப் பாதுகாப்பு நடவடிக்கைக் குழு ஆகிய அமைப்புகளிட மிருந்து கோரிக்கை ஒன்று பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.	தனித்தனியாக இயங்குகின்ற கள்ளர், மறவர், அகமுடையர் ஆகிய இனத்தைச் சார்ந்த அமைப்புகள் ஒன்றுசேர்ந்து ஒரு குடையின் கீழ் தங்களை 'தேவர்' இனம் என அழைக்க வேண்டும் என்று தெரிவித்தால் நான் அரசு அதைப் பரிசீலித்து முடிவெடுக்கும் என தமிழ்நாடு தேவர் பேரவை மற்றும் தமிழ்நாடு தேவர் (கள்ளர்) இனப் பாதுகாப்பு நடவடிக்கைக் குழு ஆகிய சங்கங்களுக்கு மாமொழி அனுப்பப்பட்டுள்ளது. அகமுடையார் வகுப்பைச் சார்ந்த இயக்கம் தேவரினம் என்னும் பெயரில் கள்ளர், மறவர் சமுகத்துடன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

(பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 11—10—1990.) அ.சா.கு. எண். 11134/பிநபி/90-3,

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல (பி.ந.1)த் துறை.

22—8—1990 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகளில் தெரிந்தெடுக்கப்பட்ட உறுதிமொழிகள்:

வரிசை எண் (1)	உறுதிமொழி எண் (2)	பார்வை (3)	பொருள் (4)
104	535/90	1990—91ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலுரை 22—8—1990.	பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் வழங்கப்படும் கூட்டணத்தை திருத்தியமைத்தல்.

உறுதிமொழியின் விவரம்
(5)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :

ஆதிதிராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிக்கும் அரசு மாணவர்கள் விடுதிகளில் உணவுத்தொகை மாற்றி அமைக்கப்படும்.

துறை எடுத்த நடவடிக்கை
(6)

அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர்/சீர் மரபினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவிகளின் உணவுக் கட்டணம் கீழ்வருமாறு உயர்த்தி ஆணை வெளியிடப் பட்டுள்ளது :

வரிசை எண்ணும் விடுதியும்.	பழைய உணவுக் கட்டண விதிதம். (ரூபாய்)	புதிய உணவுக் கட்டண விதிதம். (ரூபாய்)
(1)	(2)	(3)
1. கல்லூரி மாணவ-மாணவியர் விடுதிகள் (சென்னை மட்டும்).	140	160
2. கல்லூரி மாணவ-மாணவியர் விடுதிகள் (பிற இடங்களில்).	135	155
3. பள்ளி மாணவ-மாணவியர் விடுதிகள்	85	105

(அரசு ஆணை எண். 196, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை நாள் 6—10—1990-ன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

(அ.சா.கு. எண். 9702/பி.ந.1/90-1, நாள் 11—1—1991).

பொதுத் துறை.

வரிசை எண். (1)	உறுதிமொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
105	188/86	உடுக்குறியிட்ட வினா 3751— திரு. ஏ. தம்பிராசு, எம்.ஏல்.ஏ., 2—4—1986.	நெய்வேலியில் உள்ள தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக மருத்துவ மனை கவிக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அங்கே உடனடியாக நிரந்தரமாக அந்த மருத்துவமனை உரிய கட்டிடத்தில் இயங்குகிற வகையில் ஏற்பாடு செய்வதோடு நிரந்தரமான மருத்துவ அதிகாரிகளைப் போட ஏற்பாடு செய்யப்படுமா? வருகிற நிதி ஆண்டில் அந்தப் பள்ளிக்கூடத்தையும் மருத்துவமனை களையும் செயல்படச் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப் படுமா என்பது பற்றி.

உறுதிமொழி விவரம். (5)	துறை எடுத்த நடவடிக்கை. (6)
மாண்புமிகு திரு. தா. ராமசாமி : உரிய நடவடிக்கை அரசு மேற்கொள்ளும்.	நெய்வேலியில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்காக கட்டப்பட்ட பள்ளிக்கூடம் ஒரிரியர் பள்ளியாக வகுப்பு ஒன்றும் இரண்டும் நடத்தப்பட்டு வருகிறது. ஒன்றாம் வகுப்பில் 12 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இரண்டாம் வகுப்பில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். நெய்வேலியில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனையில் ஒரு மருத்து வரும் அவருக்கு ஒரு உதவியாளரும் பணிபுரிந்து வருகிறார்கள். மாதத்திற்கு தோராயமாக 485 நோயாளிகள் மருத்துவமனைக்கு வருகிறார்கள். உள்நோயாளி ஒருவரும் இல்லை. பள்ளிக்கூடத் திலும், மருத்துவமனையிலும் சில பழுதுகள் பார்க்க வேண்டி யுள்ளதால் ரூ. 78,000 செலவினத்திற்கு மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் வரப்

பெற்றவுடன் பழுது பார்க்கப்படும். இப்பொருள் பற்றி தனியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கள்ளிக்குடியும் ஆரம்ப சுகாதார மையமும் செயல்பட தொடங்கிவிட்டதால் மூடுக்குறிப்பிட்ட வினா எண். 3751-க்கு அளிக்கப்பட்ட விடையில் குறிப்பிட்டிருந்த உறுதிமொழி நடைமுறைப்படுத்தப்பட்டதாக கருதலாம்.

(கடித எண். 6831'ஆர்.எச். II'(1)'91-1, நாள் 31—10—1991.)

(1)	(2)	(3)	(4)
106	130/87	உடுக்குறியிட்ட வினா எண். 12457—திரு. த. மாரி முத்து, எம்.எல்.ஏ., 26-3-1987.	இலங்கை அகதிகளுக்காக செலவழிக்கப்பெறும் செலவை மைய அரசிடம் இருந்து பெறப்படுவது குறித்து.

(5)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

மீதமுள்ள தொகையை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(அ.சா.கு. எண். 1364 ம.வா. 3(1)'91-5, நாள் 22—4—1991.)

(6)

1985-86, 1986-87 மற்றும் 1987-88 வரையிலான காலத்தில் 529.68 லட்சம் செலவிடப்பட்ட தொகை முறையே ரூ. 490.22 லட்சம், ரூ. 379.65 லட்சம் ஆகிய தொகை அனைத்தும் மைய அரசிடமிருந்து மீளப் பெறப்பட்டது.

....

107	96/89	மானியக் கோரிக்கைகள் 29 மீதான விவாதத்தின் மீது மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் பதிலுரை, 29-4-1989.	

(5)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :

தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளை காப்பாற்றுவதற்காக போராடிய போராட்டத்தில் ..... தொழிலாளர்களுடைய போராட்டத்தையொட்டி தமிழகம் முழுமையும், எங்கெங்கெல்லாம் தொழிலாளர்கள் மீது, காவல் துறையினர் வழக்கு போட்டு இருக்கிறார்களோ, -வன்முறை வழக்குகளைத் தவிர- அவர்கள் மீது போடப்பட்ட அந்த வழக்குகள் வாபஸ் பெற இருக்கிறது.

கிறிப்புரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை

(7)

1. தொழிலாளர்களுடைய போராட்டத்தை ஒட்டி போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவது குறித்த மீதமுள்ள 8 வழக்குகள் புலன் ஆய்வு செய்யப்பட்டனவா ?

(16-7-1990 ஆம் நாளன்று நடைபெற்ற குழுவின் குறிப்புரை).

(6)

காவல் துறை புலனாய்வு பிரிவின் கண்காணிப்பாளர் தொழிலாளர்கள் போராட்டங்களையொட்டியே 59 வழக்குகள் தொடர்பாக புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர் என்றும், அவற்றில் 8 வழக்குகள் புலனாய்வில் உள்ளன என்றும் தெரிவித்ததின் அடிப்படையில் 17-5-1989 ஆம் நாளிட்ட பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறையின் அரசாணை நிலை எண். 827-ல், மீதமுள்ள 51 வழக்குகளை திரும்பப் பெறுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

குழுவின் குறிப்புரைகள்

(8)

1. புலன் ஆய்வில் இருந்த 8 வழக்குகளில், 2 வழக்குகள் குற்ற விடுதலையில் முடிவுற்றன. ஒரு வழக்கில், புகார் கொடுத்தவர், புகார் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என்று கேட்டுக் கொண்டதையடுத்து, அந்த வழக்கில் மேல் நடவடிக்கை கைவிடப் பட்டது. ஒரு வழக்கு ''பொருண்மைத் தவறு'' என்று தீர்மானிக்கப்பட்டது. ஒரு வழக்கு இன்னமும் புலனாய்வில் உள்ளது. சேலம் காவல் துறைக் கண்காணிப்பாளர் வழக்கினை திரும்பப் பெற பரிந்துரை செய்யாததால், ஒரு வழக்கினை நீதிமன்ற முடிவுக்கு விட்டுவிடலாம் என்று முடிவு செய்யப்பட்டது. ஏனைய இரண்டு வழக்குகளை திரும்பப் பெறுவதற்கு 10-4-1991-ஆம் நாளிட்ட பொது (சட்டம் மற்றும்

வரிசை எண். (1)	உறுதிமொழி எண். (2)	உறுதிமொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
			தமிழ்நாடு-சி.ப.அ.) துறையின் அரசாணை நிலை எண். 1456-ல், அரசு ஆணையிட்டுள்ளது. (அரசாணை நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).
			(அ.சார்பு. எண். 1753/90-6, நாள் 23-4-1991).
108	387/89	வினா நேரத்திற்கு பிறகு விளக்கம் கோரல்— திரு. செ. நார்முகமது, எம்.எல்.ஏ., 2-11-1989. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அதைப்பற்றி பரிசீலித்து முழுமையான தகவல் குடையக் கருத்துரை கோரப்படும்.	பொருள். (4) 31-8-1989 அன்று கோபி என்ற இளைஞர் கன்னியாகுமரி திருவட்டாறு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு பிறகு இறந்த அவரது குடும்பத்திற்கு அரசு நிவாரண உதவி செய்வது குறித்து. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அரசு தலைமை மருத்துவமனையில் 6-9-1989 அன்று இரவுவன் என்பவரின் மரண விசாரணை தொடர்பு. கோபி இறந்தது குறித்து விசாரணை செய்யும் பொருட்டு கன்னியாகுமரி மாவட்ட நீதிபதி திரு. ஏ. இராமலிங்கம் 1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/52)-இன் கீழ் தனி நபர் கமிஷனாக நியமிக்கப்பட்டார். விசாரணைக் கமிஷன் அறிக்கை 26-2-1990 அன்று அரசுக்கு கிடைக்கப்பெற்றது. இறந்துபட்டவரின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று விசாரணை கமிஷன் அளித்த பரிந்துரையை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. அதற்கேற்ப இறந்து போன கோபியின் குடும்பத்திற்கு வழங்க வேண்டிய இழப்பீட்டு தொகை எவ்வளவு என்பதை தீர்மானிக்க அன்னாரின் குடும்ப சூழ்நிலையையும் எவை தொடர்புள்ள சூழல்களையும் கருத்தில் கொண்டு மிய செய்குறிப்பு அரசுக்கு அனுப்புமாறு கன்னியாகுமரி மாவட்ட நீதித் தலைவருக்கு அரசு ஆணையிட்டது. இதற்கிணங்க இறந்துபோன கோபியின் குடும்பத்திற்கு நிதியுதவியாக ரூ.25,000 (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) தமிழ்நாடு அரசின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்குவதாய் என முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை நிலை எண் 923, பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு), நாள் 14-5-1990).
109	209/84	உறுதியிட்ட வினா எண். 22451, திரு. ஜெ. ஹேமச்சந்திரன், எம். எல்.ஏ., 25—4—84.	(அ.சா.கு. எண். 569/91-7, நாள் 28-2-1991). 1978-ல் ஆய்க்குடியில் ஜரிகைத்த பல் மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: லிக் கூட்டம் அணைக்கட்டு வேலை விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு எப்பொழுது ஆரம்பிக்கப்படும். [illegible] வேலை ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு மின் பற்றாக்குறை இற்குக் காரணமா என்ன [illegible] விபரங்கள் குறித்து [illegible]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பல்லிக் கூட்டம் அணைக் கட்டுவதற்காக நிட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளதா? காலதாமதத்திற்கான காரணம் என்ன'

(10— 8— 90 அன்றுள்ள பேற்று குழுவின் குறிப்புரை).

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கோடு கிராமத்தில் முக்கையாற்றின் குறுக்கே பல்லிக்கூட்டம் அணைக்கட்டு ரூ. 11.70 இலட்சத்தில் கொடுக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. இந்த அணைக்கட்டு வேலைகளுக்கு தலைமைப் பொறியாளர் (நிட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்கள் நிட்ட அறிக்கை தயாரித்து அரசின் நிர்வாகத்திற்காக 5.11.87 அன்று அனுப்பினார்.

2. மேற்கண்ட நிட்டம் குறைந்த பயன்செலவு விகிதத்தில் இருப்பதால் (Benefit Cost Ratio 0:02:1) சிறப்பு அலுவலர் மற்றும் நில நிர்வாக அலுவலர் அவர்கள் மிகப் பெரிய செலவினை இந்நிட்டத்தை செயல்படுத்துவதைவிட குறைந்த செலவில் புதிய தடுப்பு அணைகள் கட்டுவதற்கு பரிசீலிக்க அரசு கேட்டுக் கொண்டதால், இந்நிட்டம் அரசு கடித எண். (நிலை) 2308, பொ.ப.து., நாள் 1— 11— 90-ல் நிராகரிக்கப்பட்டது.

3. பின்னர் முன்னாள் செலவில் புதிய தடுப்பு அணைகள் கட்ட தலைமைப் பொறியாளர் (நிட்டங்கள் மற்றும் வடிவமைப்பு) அவர்களால் புதிய நிட்டங்கள் தயார் செய்ய மாநில அரசு செயலாளர் வழங்கும் நிறுப்பு ஆணையர் முழுமையான நிர்வாக அனுமதியையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

4. அரசு கடித எண். (நிலை) 2308, பொ.ப.து., நாள் 1— 11— 90-ன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(அரசு கடித எண். 106176/இ3 87-4, நாள் 18— 1— 91.)

உறுதிமொழி எண். 167'85 மற்றும் 584'87 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள நிலை.

(1)	(2)	(3)	(4)
110	167'85	உடுக்குறியிட்ட வினா எண். 571, நாள் 7— 6— 1985 முதலதாயது, எம். எல். ஏ.	மாண்புமிகு திரு. யாதவ ராவ் அவர்கள் கொடுத்த வினாவிற்கு விடையில் அரசு அளித்த பதில் நகல் குறித்து கொடுக்கப்பட்டுள்ளது.

(5)	(6)	(7)	(8)
111	584'87	உடுக்குறியிட்ட வினா எண். 11068, அவை தலைவர் திரு. தேவராஜ் கோரிக்கை எண். 70— 11— 87	மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்கள் கொடுத்த வினாவிற்கு விடையில் அரசு அளித்த பதில் நகல் குறித்து கொடுக்கப்பட்டுள்ளது.

167/85-க்குக் காண்க.

(1)	(2)	(3)	(4)	(5)
